பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 09 புதன்கிழமை 25.08.2021 கதிர் 293

இனிது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் அமுல்பேபி அண்ட் கோவின் அத்துமீறல் விவகாரத்தின் தொடர்ச்சி உயர் நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்காக மாறியிருக்கின்றது.

இந்த அத்துமீறல் அடாவடித்தனத்தின் முதல் பக்கம்02

# மங்களவின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமம்!

## இறுதிக்கிரியை நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள் பங்கேற்பு



கொழும்பு, ஓகஸ்ட் 25

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் பூதவுடல் மீதான இறுதிக்கிரியைகள் பொரளை பொது மயானத்தில் நேற்று மாலை நடைபெற்றன. சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகப் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த மங்கள, நேற்றுக் காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில், பொரளை பொது மயானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இறுதிக் கிரியை நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர்கள் மற்றும் ஆளும், எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



## அரசு - தமிழர் தரப்பு

# பின்கதவு பேச்சுகள் மும்முரம்!

### சுமந்திரனுடன் தொடர்பாடல்

கொழும்பு, ஓகஸ்ட் 25

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர் தரப்புக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பற்றிய பின்கதவு உரையாடல்கள் மும்முரம் பெற்றிருக்கின்றன என்று நம்பிக்கையாகத் தெரியவருகின்றது. இது தொடர்பில் அரச உயர் வட்டாரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரனுடன் கொழும்பில் நேற்றுமுன்தினம் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை உத்தி யோகப்பற்றற்ற முறையில் மேற்கொண்டிருந்ததாகவும் மிக நம்பகமாக அறிய வந்தது. 2

# இலங்கையில் ஒரே நாளில் 4,427 பேருக்குக் கொரோனா

இலங்கையில் நேற்று 4 ஆயிரத்து 427 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுவே நாளொன்றில் இது வரை அடையாளம் காணப்பட்ட அதிகளவிலான தொற்றாளர்களின் எண்ணிக்கையாகும்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 98 ஆயிரத்து 801 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 386 பேர் குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 46 ஆயிரத்து 767 ஆக உயர்வடைந்துள்ளது.

## அரசின் செயல் திருப்தி இல்லை

### சிறிதரன் எம்.பி. சாடல்



கிளிநொச்சி மாவட்டத்தில் 50 வீதமான குடும்பங்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ள நிலையில் அரசின் உதவிகள் 10

## கொரோனாத் தொற்றால் மேலும் 190 பேர் மரணம்!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 190 பேர் மரணித்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 750 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 190 பேரில் 77 பெண்களும், 113 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் 30 வயதுக்குட் பட்டவர்களாவர். 10

## யாழில் 5 பேர் உட்பட வடக்கில் 10 பேர் மரணம்

வடக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர், கொடிகாமத்தைச் சேர்ந்த மூவர், கிளிநொச்சியைச் 10

## அரசியல் வரலாற்றில் பெரும் புள்ளி மங்கள

### ஜனாதிபதி கோட்டாபய இரங்கல்

இலங்கை அரசியல் வரலாற்றில் பெரும் மாற்றங்களையும் திருப்புமுனைகளையும் ஏற்படுத்தி, இலங்கை மக்களுக்கு விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்கத்தீவிரமாகப் பங்களித்து, நன்றியுள்ள அரசியல்வாதியாகத் திகழ்ந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் திடீர் மறைவுச் செய்தி 2



## கொள்கைகளுக்காக முன்னின்ற உற்ற நண்பனை இழந்துள்ளேன்



### சம்பந்தன் எம்.பி. ஆழ்ந்த கவலை

மீள் நிரப்ப முடியாத வெற்றிடத்தை மங்கள சமரவீரவின் மரணம் ஏற்படுத்தியுள்ளது. கொள்கைகளுக்காக முன்னின்ற ஓர் உற்ற நண்பனை இழந்துள்ளேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மரணம் தொடர்பாக அவர் வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே இதனைக் குறிப்பிட்டார். 10

## நெஞ்சாரத் துயரத்தில் வீழ்ந்து கிடக்கின்றோம்

### மங்களவுக்கு மாவை அஞ்சலி

முன்னாள் அமைச்சர் மங்களசமரவீரவின் திடீர் மறைவால் நாம் நெஞ்சாரத் துயரத்தில் வீழ்ந்து கிடக்கின்றோம்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதிருப்தி பகிரங்கமாக வெளிப்பட்டது சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் கூட்டம் ஒன்றில்தான்.

அரச உதவித் திட்டத்தின் கீழ் வீடமைக்கும் திட்டத்துக்கான பயனாளிகளின் தெரிவுப் பட்டியல் கட்சி அரசியல்வாதியின் விருப்புக்கு ஏற்பவே தயாரிக்கப்பட்டுள்ளது, உண்மையில், நியாயமாகக் கிடைக்க வேண்டிய – தகுதியுடையவர்களின் ஒழுங்கில் அல்ல என்பதை அந்தக் கூட்டத்தில் புட்டுப்புட்டு அம்பலப்படுத்தித் துணிச்சலுடன் போட்டுடைத்தார் இளைஞரான ஸ்ரீபுஷ்பநாதன் துஷியந்தன் என்ற அரச அபிவிருத்தி அலுவலர்.

அந்த அடிப்படையில் முறைப்பாடுகள் வெளிப்படத் தொடங்க, யாழ்.மாவட்டத்தில் உள்ள அனேக பிரதேச செயலர் பிரிவுகளிலும் இந்தப் பட்டியல்கள் மீளாய்வு செய்யப்படும் நிலைமை உருவானது. சுமார் பதினைந்து, இருபது வீதப் பயனாளிகள் இப்படி 'சுத்துமாத்தாக' தெரிவு செய்யப்பட்டுள்ளனர், பல பிரதேச செயலர் பிரிவுகளில் பிரதேச செயலர்கள் வரை இந்தக் குளறுபடிகளுக்குக் காரணம் என்பவை எல்லாம் அம்பலமாகத் தொடங்கின.

வீடமைப்புத் திட்டத்தில் இருந்து எல்லா விடயங்களிலும் 'அமுல்பேபி அண்ட் கோ'வின் அத்துமீறல்கள், அராஜகங்கள் புற்றீசல் போல வெளியே வருவதற்கான முதல் ஆப்பை அந்த இளம் அதிகாரியின் துணிச்சலான நடவடிக்கை வெளிப்படுத்த, அமுல்பேபிக்கான தனது பணிவை நிரூபிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் செய்த பதில் நடவடிக்கை என்ன தெரியுமா?

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இருந்து சங்கானை பிரதேச செயலகத் திற்கு அவரைப் பழிவாங்கல் அரசியல் இடமாற்றம் செய்ததுதான்.

அமுல்பேபி அண்ட் கோவின் அரசியல் அராஜகங்களுக்குச் செக் மேட் வைக்க அனுப்பப்பட்ட அரசுத் தரப்பின் விசேட பிரதிநிதியின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டது.

இத்தகைய அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைக்கு எதிராக அரசுத் தலைமையே தலையிட்டு ஒரு கணத்தில் நீதி செய்யும் பதில் நடவடிக்கையை எடுக்க முடியும்.

ஆனால், அதை விடுத்து இப்படித் தவறான நடவடிக்கைகளுக்கு துணை போகும் அதிகாரிகளுக்கு உரிய முறையில் – சட்ட ரீதியாக – பாடம் படிப்பிக்க வேண்டும் என்று கருதிய அரசுத் தலைமை அதனால் அந்த இளம் அரச அதிகாரியை நீதிமன்றத்தை நாடி, அதன் மூலம் நடவடிக்கை எடுக்க ஆற்றுப்படுத்தியது.

அரசியல் பழிவாங்கலுக்கு அரசியல் ரீதியாகத் தலையிட்டு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதை விடுத்து, சட்ட ரீதியாக நியாயத்தைப் பெற்றுக் கொப்பது ஒரு நோக்கம்.

அடுத்தது – அரசியல்வாதிகளின் தில்லுமுல்லுக்கு குறுக்கு வழியில் உதவும் அரச உயரதிகாரிகளுக்கு சட்ட ரீதியாகப் பாடம் படிப்பித்து திருத்துவதற்கு நீதிமன்றத்துக்கு இழுப்பது அடுத்த இலக்கு.

மூன்றாவது – அப்படி அரசியல்வாதிகளின் தவறான அழுத்தத்துக்குத் துணை போகும் உயரதிகாரிகள் எந்தக் கீழ் நிலை அரச ஊழியரும் அம்பலப்படுத்தலாம். அதற்காக அவர்கள் அரசியல் ரீதியாகப் பழிவாங்க இடமளிக்கப்படமாட்டாது. சட்டரீதியாக அவர்களைக் காப்பாற்ற பின்னணியில் நின்று வழிகாட்டல் மற்றும் உதவிகள் வழங்கப்படும் என்பதை சகலருக்கும் உணர்த்துவது.

இந்த வழக்குத் தாக்கலுக்குப் பின் நின்று, ஆற்றுப்படுத்தி, நேரடியாக உதவியதன் மூலம் மேற்படி விடயங்களை யாழ்.அரச ஊழியர்களுக்குக் காட்டியிருக்கின்றது அரசுத் தலைமை.

மேற்படி அரச ஊழியரான இந்த இளைஞனின் பழிவாங்கல் இடமாற்றத்துக்கு எதிராக நேற்று உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த மனுவில் முதலாவது எதிர் மனுதாரர் யாழ். அரச அதிபர் கே.மகேசன். இரண்டாவது எதிர்மனுதாரர் தென்மராட்சி பிரதேச செயலாளர் எஸ்.உஷா. சட்டமா அதிபர், வடக்கு மாகாண ஆளுநர் உட்பட மொத்தம் பதினான்கு பேர் எதிர்மனுதாரர்கள்.

அமுல்பேபி அண்ட் கோவுக்கு சாமரம் வீசுவதற்காக ஒழுங்கு நியதிகளுக்கு மாறாக செயற்படும் அதிகாரிகள் பலர் நீதிமன்றுக்கு அழைக்கப்படவிருக்கின்றனர் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கூறுகின்றன. அதற்கான முதல் பரீட்சார்த்த வழக்குத்தானாம் இது. இனி வரிசையாகப் பலர் நீதிமன்றுக்கு அழைக்கப்படக் கூடும்.

ஆனால் அதிகாரிகளுக்குப் பயம் ஏன்? சட்டத்தரணிகளையும், நீதிமன்றுக்கு செல்வதற்கான ஏனைய வசதிகளையும் அமுல்பேபி அண்ட்கோ நிரந்தரமாகத் தந்துதவும் என்ற கனவில் இருக்கும் அதிகாரிகள் இப்போதைக்குத் திருந்தவே மாட்டார்கள். ஆனால் சட்டம் விரைவில் நல்ல பாடம் போதித்துக் கொடுக்கும் போது அவர்கள் கனவு கலையும், உண்மை – யதார்த்தம் – புகட்டப்படும். அதுவரைப் பொறுத்திருக்கலாம்...!

– மின்னல் –

## அரசியல் வரலாற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வருத்தம் அளிக்கின்றது.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவையொட்டி, ஜனாதிபதி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## நெஞ்சாரத் துயரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

மங்கள சமரவீரவை நாடு இழந்துவிட்டதென்ற செய்தியைக் கேட்டபோது மிகுந்த அதிர்ச்சியடைந்தோம்.

இவ்வாறு தொடர்ச்சியாகப் பல திங்களாக கொரோனா வைரஸ் தொற்றால் நூற்றுக்கணக்கில் மனிதர்கள் கொல்லப்படுகிறார்கள். இலட்சக்கணக்கில் உயிருக்குப் போராடும் மனிதகுலத்தின் ஈனக் குரலை நாம் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

மங்கள சமரவீர பௌத்த, சிங்கள தீவிரவாத தேசத்தில் – அரசியல் வரலாற்றில் தமிழ்த் தேச மக்களின் நீதிக்காக, அரசியல் விடுதலைக்காகக் குரல் எழுப்பியவர்.

இவ்வாறு செயற்பட்டு வந்த மனித நேயமிக்க ஓர் அரசியல் தலைவனை ஜனநாயகம், மனிதாபிமானம், விடுதலைக்காக ஏங்கி நிற்கும் மக்கள் இழந்து நிற்கின்றார்கள் என்கின்றபோது நாம் நெஞ்சாரத் துயரத்தில் வீழ்ந்து கிடக்கின்றோம்.

மங்கள சமரவீரவை ஒரு பௌத்த சிங்களத் தலைவனாக நாம் பார்த்ததில்லை. அவர் அவ்வாறு செயற்பட்டவரும் அல்லர்.

போரினால் அழிந்துபோன தமிழர் பிரதேசத்தையும் சீர்குலைந்துபோன மக்களையும் அரவணைத்து மீண்டும் வாழ்வு பெறவும், உரிமை பெறவும் மங்கள முன்னின்று செயலாற்றியமையை நினைவு கூருவோம்.

பௌத்த, சிங்களத் தீவிரவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் மங்கள சமரவீர தவறவில்லை என்பதைக் கூறுவோம். பௌத்த, சிங்களத் தீவிர சக்திகள் மங்களவைத் திட்டித் தீர்த்தமையை அறிவோம்.

நாள்தோறும் கொரோனா வைரஸ் கொடுமையால் உயிர்ப்பலி கொடுக்கும் மக்களில் இலங்கைத் தீவில் மனித நேயமிக்க ஒரு அரசியல் தலைவனை இழந்துவிட்டோம் என்பதுதான் இன்றைய முக்கிய செய்தி ஆகும்.

சர்வதேச அரங்கில் இலங்கையின் இழந்துபோன கௌரவத்தை – ஜனநாயகத்தை – நீதியை ஐ.நா மன்றத்திலும் உலகத் தலைவர்கள் மத்தியிலும் மீட்டுப் பெரும் மேன்மையைப் பெற்றவர் மங்கள சமரவீர.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் எனும் நம்பிக்கையை நிலை நாட்டிய நட்சத்திரமாய், தலைவனாய் விளங்கிய மங்களவை இழந்து தவிக்கின்றோம் என்பதையும் பதிவு செய்கின்றோம்.

மக்கள் நம்பிக்கையைப் பெற்ற ஒரு மகத்தான தலைவனை, தென்னிலங்கையில் ஜனநாயக நட்சத்திரத்தை இழந்த அனைவருடனும் அன்னார் ஆத்ம சாந்திக்காக நாமும் இணைந்து பிரார்த்திக்கின்றோம். அஞ்சலி செலுத்தி நிற்கின்றோம் – என்றுள்ளது.

## பின்கதவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அரசு உயர் வட்டாரம் சுமந்திரனிடம் பின்வரும் தகவல்களை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது:–

★ கொரோனாத் தொற்று உச்சம் அடைந்திருக்கும் இச்சமயத்தில் நேரடிப் பேச்சு என்ற அரசியல் விவகாரம் சாத்தியமற்றது. நேரடிப் பேச்சு நிச்சயம். அதில் ஜனாதிபதியும் மிக மிக உறுதியாக இருக்கின்றார். கொவிட் நெருக்கடி கொஞ்சம் தளர்ந்ததும் நேரடிப் பேச்சைத் தொடங்குவோம்.

★ கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் சுமந்திரனோடு உத்தியோகப்பற்றற்ற முறையில் மூன்று தடவைகள் கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்துப் பேசினார். அப்போது சில விடயங்கள் குறித்து அவர் உறுதியளித்திருந்தார். அவற்றை நேரடியாக பேசி நிறைவேற்றுவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போதும் மிக உறுதியாக இருக்கின்றார். அந்தச் செய்தியை சுமந்திரன் தரப்புக்கு தெரியப்படுத்தும் படி ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

– இவ்வாறு அரசு தரப்பில் கூறப்பட்ட தகவலை ஒட்டி சுமந்திரன் தரப்பில் பின்வரும் விடயங்கள் மேற்படி திங்கட்கிழமை நடைபெற்ற பின்கதவு உரையாடலின் போது சுட்டிக் காட்டப்பட்டன:–

★ கொரோனாப் பெருந்தொற்றுச் சமயத்தில் – இந்த நெருக்கடிக்கு மத்தியில் – நேரடிப் பேச்சு உடனடியாக சாத்தியமற்றது என்பதை புரிந்து கொள்கிறோம். அதற்காக அவசரப்பட தேவையில்லை.

★ நேரடிப் பேச்சு இல்லாமலேயே, அதற்கு முன்னர் பல விடயங்களைச் செய்வதன் மூலம் நல்லெண்ணத்தை அரசு காட்ட முடியும்.

★ மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போதும் கூட்டமைப்புடன் தீர்வுக்கான பல சுற்றுப் பேச்சுக்களை அந்த அரசு நடத்தியது. அதில் முதலில் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துவது, பின்னர் சுமுக நிலை ஏற்பட, அதையும் தாண்டி தமிழர்களின் அபிலாஷைகளைத் தீர்க்கும் மற்றைய விடயங்களைக் கையாளலாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்மொழிந்திருந்தார். அதையே இப்போதும் ஆரம்பிக்கலாம்.

★ பதின்மூன்றாவது அரசமைப்புத் திருத்தத்தில் இருக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் நேரடிப் பேச்சுக்கள், சந்திப்புகள் தேவையில்லை. அவை சட்டத்திலுள்ள விடயங்கள். அவற்றை நடைமுறைப் படுத்தும் தீர்மானத்தை எடுத்துச் செயற்படுத்தும் வேலையை அரசுத் தலைமை தன்பாட்டிலேயே செய்யலாம்.

★ ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் என்னைச் சந்தித்து மூன்று முறை பேசிய போதும் கோட்டாபய ராஜபக்ஷ மூன்று விடயங்களை உறுதியாக அளித்திருந்தார். ஒன்று – மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கலாம். இரண்டு – மாகாணங்களுக்கு காணி அதிகாரம் வழங்கப்பட முடியும். மூன்றாவது – 13ஆவது திருத்தத்தில் காணப்படும் மத்திய – மாகாண அரசுகளுக்கான அதிகாரங்கள் பற்றிய பொதுநிரலை இல்லாமலாக்கி, அதிகாரங்களை வரையறுத்துத் தெளிவுபடுத்துதல்.

இதில் மூன்றாவதைத் தவிர, மற்ற இரண்டையும் முன்னெடுப்பதற்கு நேரடிப் பேச்சு அவசியமல்ல. 13ஆவது திருத்தத்தில் – சட்டத்தில் – இருப்பதை நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தை அரசுத் தலைமை எடுத்துச் செயல்படுத்த வேண்டியதுதான் மிச்சமாக உள்ளது.

★ ஒருபுறம் அவற்றைத் ஏற்படுத்தியபடி, மறுபுறத்தில் மாகாண அதிகாரங்களைப் பகிர்ந்து நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக மாகாண சபை தேர்தல்களைக் காலதாமதமின்றி உடன் நடத்தமுடியும். (அதற்கான குறுகிய சட்ட வழிமுறைகள் யாவை என்பதையும் சுமந்திரன் தெளிவுபடுத்தினார்.)

★ மாகாண நிர்வாகங்களின் கீழ் இருக்கும் பாடசாலைகள், ஆஸ்பத்திரிகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வருதல், மக்களின் காணிகளை ஏதேனும் காரணங்களைக் காட்டி ஆக்கிரமித்தல் போன்ற நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும். அப்படி நிறுத்துவது பேச்சுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகளை விடுவித்தல் போன்றவற்றையும் அரசு துரிதப்படுத்த வேண்டும்.

★ இவை அனைத்தையும் செய்வதற்கு நேரடிச் சந்திப்புகள், பேச்சுகள் தேவையில்லை. இவற்றை செய்தால் நேரடிப் பேச்சுக்கான சமூக சூழ்நிலை ஏற்படும். இவற்றைச் செய்வதற்கான சட்ட அதிகாரம் அரசுக்கு உண்டு. நாடாளுமன்றத்தின் அனுமதிக்குக் கூடக் காத்திருக்க தேவையில்லை. – இவ்வாறு சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

மாகாணசபை தேர்தலை நடத்தி, 13ஆவது திருத்த ஏற்பாடுகளை உடனடியாக நடைமுறைப் படுத்துவது முதலில் செய்து கொண்டு, பின்னர் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றி உரையாடுவதுதான் சரியான நிகழ்ச்சி நிரலாக இருக்கும் என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் கருதுகிறார் என்று திங்கள் இடம்பெற்ற பின்கதவு பேச்சுக்களின் போதும் சுமந்திரனுக்கு உணர்த்தப்பட்டதாகவும் அறிய வந்தது.

2019 ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் சுமந்திரனை சந்தித்த சமயம் கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்த விடயங்கள், அண்மையில் அமெரிக்க தூதரின் இல்லத்தில் இரவு விருந்துடன் சுமந்திரனை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் சந்தித்தபோதும் பிரஸ்தாபிக்கப்பட்டன. அவற்றை அச்சமயத்தில் தமது கருத்தாக பேராசிரியர் பீரிஸ் முன்வைத்தார் என்று அறிய வந்தது. அந்த விடயங்களையாவது இப்போதைக்கு முன் நகர்த்த அரசு தயாராக இருப்பதாக தெரியவருகின்றது.



காலைக்கதிர் Kalaikkathir

# அவசர தொலைபேசி இலக்கங்களுக்கு 4 நாள்களில் 4 ஆயிரம் அழைப்புக்கள்!

## வைத்தியர் இந்திக தெரிவிப்பு

சுகாதார அமைச்சு, இலங்கை மருத்துவ சங்கம், மொபிடெல் நிறுவனம் மற்றும் கொவிட் தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையம் இணைந்து கொவிட் தொற்றாளர்களுக்கான சேவை வழங்கும் தொலைபேசி மற்றும் குறுஞ்செய்தி சேவையை ஆரம்பித்திருந்தன.

அவற்றில் 247 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு கடந்த 4 நாள்களில் 4 ஆயிரம் பேரின் அழைப்புக்கள் கிடைக்கப்பெற்றுள்ளமையோடு, 1904 என்ற இலக்கத்துக்கு 11 ஆயிரம் குறுஞ்செய்திகள் கிடைக்கப்பெற்றுள்ளன என இலங்கை மருத்துவ சங்கத்தின் முன்னாள் தலைவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் வைத்தியர் இந்திக கருணாரத்ன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்

அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை துரிதமாக இனங்காணல் மற்றும் வைத்தியசாலைகளில் அனுமதித்தல் என்பவற்றுக்காக சுகாதார அமைச்சு, இலங்கை மருத்துவ சங்கம் மற்றும் மொபிடெல் நிறுவனம் இணைந்து தொலைபேசி சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

அதற்கமைய அவசர சிகிச்சை தேவைப்படும் தொற்றாளர்கள் 1990 அம்புலன்ஸ் சேவைக்கு அழைத்து வைத்தியசாலைக்கு செல்ல முடியும்.

இதேவேளை மேல் மாகாணத்திலுள்ள எந்தவொரு நபரும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவராக இருந்தாலோ அல்லது தொற்றாளருடன் நேரடி தொடர்பைப் பேணியமையால் தொற்று ஏற்பட்டிருக்கக் கூடும் என்று சந்தேகிப்பவராக இருந் தாலோ 1904 என்ற இலக்கத் துக்குக் குறுஞ்செய்தி அனுப்ப முடியும். அல்லது 247 என்ற இலக்கத்துக்கு அழைத்து வைத்தியர் களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த இலக்கத்துக்கு அழைத்து 2 நிமிடங்களில் வைத்தியர்கள் நோயாளர்களுடன் உரையாடுவர்.

அதன் பின்னர் தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட வேண்டியவர்களா அல்லது வீடுகளில் சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்களா என்பதை வைத்தியர்கள் தீர்மானிப்பர்.

247 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு கடந்த 4 நாள்களில் 4 ஆயிரம் பேர் அழைத்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதே போன்று 1904 இலக்கத்துக்கு 11 ஆயிரம் குறுஞ்செய்திகள் கிடைக்கப் பெற்று அவை வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 2,000 - 3,000 தொற்றாளர்களுக்கு மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. - என்றார்.

# 9 ஆயிரத்து 606 பேருக்கு வீடுகளிலேயே சிகிச்சை

நாடளாவிய ரீதியில் வீடுகளிலேயே சிகிச்சையளிக்கப்பட்ட கொவிட் தொற்றாளர்களில் 26 ஆயிரத்து 173 பேர் முழுமையாகக் குணமடைந்துள்ளமையோடு 9 ஆயிரத்து 606 பேருக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் வீடுகளில் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் அயந்தி கருணாரத்ன தெரிவித்தார்.

இதற்காக தற்போது 900 வைத்தியர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனவும், இவ்வார இறுதிக்குள் இந்த எண்ணிக்கையை 1,500 ஆக அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் வைத்தியர் அயந்தி கருணாரத்ன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் (திங்கட் கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

# வீடு வீடாகச் சென்று தடுப்பூசி ஏற்றல் முல்லையில் ஆரம்பம்

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வீடுகளுக்குச் சென்று தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) ஆரம்பமானது. 'அனைவருக்கும் தடுப்பூசி' எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மூன்றுமுறிப்பு, பாலைப்பாண, வன்னிவிளாங்குளம் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து மேற்கொள்ளும் இந்த வேலைத்திட்டம் ஒரு வாரத்துக்கு இடம்பெறவுள்ளதாகவும், அதற்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடல்

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் எலைய்னா டெப்லிட்ஸ், இலங்கையின் வெளியுறவு அமைச்சில் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை சந்தித்தார் என அமைச்சு நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) தெரிவித்துள்ளது.

இதன்போது, கொவிட் தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்கும், எம்.வி.எக்ஸ்- பிரஸ் பேர்ள் கப்பல் பேரழிவின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக-பொருளாதார பாதிப்புகளைத் தணிப்பதற்கும் அமெரிக்கா வழங்கும் ஒத்துழைப்புக்கு ஜி.எல்.பீரிஸ் நன்றி தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கையில் அமெரிக்காவில் இருந்து தனியார் துறை முதலீடுகளை வரவேற்கிறேன் என அவர் தெரிவித்தார். இதேவேளை அமெரிக்க - இலங்கை கூட்டாண்மை பேச்சு, வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பின் கூட்டு ஆணையகம் உள்ளிட்ட பிற இருதரப்பு விடயங்களும், இந்தச் சந்திப்பின் போது விரிவாக விவாதிக்கப்பட்டன என இலங்கையின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

# தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறியோருக்கு கட்டாய பி.சி.ஆர் சோதனை



கிண்ணியா பிரதேச சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதிகளில் நடமாடியவர்களுக்குக் கட்டாய பி.சி. ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டுள்ளதாகக் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம். ரிஸ்வி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்

இவ்வாறு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறி கடந்த திங்கட்கிழமை நடமாடிய 25 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

அதேநேரம் மக்கள் சட்டத்தை மதித்து அவதானமாகவும் பொறுப்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் கிண்ணியா சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட பிரிவில் விசேட தேவையுடையவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்காக நடமாடும் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளை கேட்பதற்குத் தயார் நிலையில் அரசு!

## மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே கூறுகின்றார்

அரசு என்ற வகையில் நாட்டைப் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி உள்ளடங்கலாக அனைவரினதும் ஆலோசனைகளையும் சுகாதார வழிமுறைகளுக்கு அமையக் கேட்பதற்கு நாம் தயாராகவுள்ளோம் என மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அனைத்து எதிர்க்கட்சியினரும் நாட்டை முடக்குமாறு கோரிக்கை விடுத்தனர். அதே போன்று சுயமுடக்க நிலைக்குச் சென்றனர். ஆனால், ஒரு வாரத்துக்கு முன்னர் சுகாதார விதிமுறைளை மீறி எதிர்ப்பு நடவடிக்கைளை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நாட்டில் அதிகரித்துள்ளது. இந்தத் தரப்பினர் நாட்டு மக்களை நேசிப்பதன் காரணமாக இவ்வாறு செயற்படுகின்றனரா? அல்லது தமது அரசியல் தேவைப்பாட்டை நிறைவேற்றிக்கொள்வதற்காக இவ்வாறு செயற்படுகின்றனரா?

நாம் அரசு என்ற வகையில் நாட்டைப் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி உள்ளடங்கலாக அனைவரினதும் ஆலோசனைகளையும் சுகாதார வழிமுறைகளுக்கு அமையக் கேட்பதற்குத் தயாராகவுள்ளோம். அதற்கமையவே ஜனாதிபதியும் செயற்பட்டு வருகின்றார்.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தால், கொரோனா வைரஸ் தொற்றையும் எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்படும். ஜனாதிபதியின் நடவடிக்கையின் காரணமாக இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசியை வழங்கக்கூடியதாகவுள்ளது. ஆனால், தற்போது கருத்துத் தெரிவிக்கும் தொழிற்சங்கத் தலைவர்கள் எப்போதும் எமக்கு ஆதரவை வழங்கவில்லை.

தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை நாம் ஆரம்பித்தபோது, தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க ஆரம்பித்ததுடன், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள முற்பட்டனர்.

ஆனால், இராணுவ வைத்தியப் பிரிவினர் இருந்தமையின் காரணமாக அந்த நடவடிக்கையை வெற்றிகரமாக முன்னெடுக்கக் கூடியதாகவிருந்தது. - என்றார்.

# 'மெனிகே மகே ஹிதே' என்ற பாடலிலிருந்து ஜனாதிபதி கோட்டா பாடம் கற்க வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 'மெனிகே மகே ஹிதே' என்ற சிங்களப் பாடலில் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

இது சர்வதேச வெற்றிப் பாடலாக மாறியுள்ளது. இதன்படி கொரோனாத் தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதில் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்களின் ஆலோசனைகளை ஜனாதிபதி கேட்க வேண்டும் என்று நிரோஷன் பாதுக்க தெரிவித்தார்.

'மெனிகே மகே ஹிதே' என்ற பாடலை முதலில் பாடியவர் இப்போது பாடும் பாடகர் அல்லர், இருப்பினும் அவரே அந்தப் பாடலை வெற்றி பெறச் செய்தார்.

அதுபோலவே பிற அரசியல் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்களின் ஆலோசனையைப் பின்பற்றி கொரோனாத் தொற்றுநோயை எதிர்த்துப் போராடினால் ஜனாதிபதியும் அதற்கான பெருமையைப் பெறலாம் என்று அவர் தெரிவித்தார்.

போரில் வெற்றி பெற்றதற்காக இந்த நாட்டு மக்கள் ராஜபக்ஷவுக்கு மரியாதை அளித்தனர், ஆனால் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அதில் முக்கிய பங்கு வகித்தார் என்ற மற்றோர் உதாரணத்தையும் நிரோஷன் பாதுக்க மேற்கோள் காட்டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சேற்றில் முகிழ்ந்த வெண்தாமரை

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டமை போல –

இந்த நாட்டைப் பல்லின, பன் மத, பல்மொழி நாடாகக் கருதிச் செயற்பட்ட – அந்த எண்ணம் இந்த நாட்டின் அதிகாரபூர்வ கொள்கையாக மாற வேண்டும் என்று கருதிச் செயலாற்றிய – ஒரு சிங்களச் சகோதரத் தலைவரை நாம் இன்று கொரோனாவுக்குப் பலி கொடுத்திருக்கின்றோம்.

அரசியல் சுயலாபங்களுக்காகத் தமது மனச்சாட்சியை அடகு வைத்து, பௌத்த, சிங்களப் பேரினவாதிகளாக தம்மை மாற்றிக் கொண்ட தென்னிலங்கையின் அற்பத்தமான அரசியல்வாதிகள் மத்தியில் மங்கள சமரவீர ஒரு வித்தியாசமான விடிவெள்ளி.

மனதில் பட்ட உண்மைக்காக – நீதிக்காக – நியாயத்துக்காக – செயற்பட்டவர் அவர். அதற்காகப் பதவிகளையும் பவிசுகளையும் தூக்கி எறிந்தவர்.

அரசியல் இலாபங்களுக்காக – நீதி, நியாயங்களுக்கு மாறாக – அவர் சமரசம் செய்தவரேயல்லர். நீதி, நியாயத்தின் பக்கம் தனித்து நிற்கவும் அஞ்சியவரல்லர். அதற்காக எந்த அச்சுறுத்தல் வரினும் அதை எதிர்கொள்ளவும், பதவி, பவிசுகளை அற்பமாகக் கருதித் தூக்கி எறியவும் பின்னின்றவரும் அல்லர்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட நியாயத் தன்மையை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டமையால் மங்கள சமரவீரவை பேரினவாதச் சேற்றில மலர்ந்த வெண்தாமரை என்று விவரித்திருக்கின்றார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்.

சரியான, குறியீட்டு உதாரணம்தான். சேற்றிலிருந்து செந்தாமரை பூப்பது போல பேரினவாதச் சக்திகளுக்குள் இருந்து பல்லின, பல்மத, பல்மொழி சமரச நோக்கோடு துணிந்து வெளிப்பட்டவர், மனச்சாட்சிக்கு நியாயமாக நின்றமையால், பௌத்த, சிங்களப் பேரினவாதச் சுழலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பேரினவாத அரசியலினின்றும் தூக்கி வீசப்பட்டவர்.

யாழ். குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரை 1995இல் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர்தான் மங்கள சமரவீர என்ற அரசியல்வாதியைப் பற்றி அறியவும், எதிர்கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டியது.

பண்பாட்டுக் கொடூரமாக அரங்கேறிய யாழ்ப்பாண பொது நூலக எரிப்பு என்ற நாசத்துக்கு பிராயச்சித்தம் செய்யும் முயற்சியாக அப்போது 'செங்கல்லும் புத்தகமும்' என்ற ஓர் இயக்கத்தை சந்திரிகா அரசு முன்னெடுத்தது. அதில் அதிக ஈடுபாடு காட்டியவர் மங்கள.

தன்னை சமாதான தேவதையாக முன்னிறுத்தி ஆட்சிப் பீடத்துக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க அரசில் முக்கிய தளபதியாக இருந்தவர் மங்கள சமரவீர. அச்சமயம், இனச மரசத்துக்கான முயற்சி என்ற பெயரில் சந்திரிகா ஆரம்பித்த 'வெண்தாமரை இயக்கத்தில்' முக்கிய பங்காளியாகச் செயற்பட்டவர் மங்கள சமரவீர. அவரைப் பேரினவாதச் சேற்றில் மலர்ந்த வெண்தாமரையாக உவமிப்பது சாலப் பொருத்தமானதுதான்.

இந்த நாடு பன்மதங்களைக்கொண்ட, பல்லின, பன்மொழி நாடு என்று திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறியமையினால் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்குக் கொண்ட பௌத்த பீடங்களினால் சிங்கள, பௌத்த தேசத்தின் தேசிய எதிரியாக அவர் உருவகப்படுத்தப்பட்டார்.

பேரினவாத மேலாண்மை வெறிப்போக்குக் கொண்டவர்களை, அதற்காகத் தேசிய வீரர்களாக போற்றும் இனவாதச் சகதியில் அவர் தேசத்தின் துரோகியாகவும், தேசிய எதிரியாகவும் அடையாளப்படுத்தப்பட்டமை வியப்பன்று.

*"மனச்சாட்சியின் அடிப்படையில், தான் நம்புகின்ற கோட்பாட்டுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட யுகபுருஷரே மங்கள சமரவீர"* – என்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவின் கருத்தும் முற்றிலும் சரியாகும்.

இலங்கைத் தமிழர்களுக்கு நீதி செய்யும் நோக்கோடு ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் மன்றில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களுக்கு இலங்கையையும் இணங்க வைத்து, இலங்கையின் அனுசரணையுடன் அந்தத் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்ற வைத்த பெருமை அச்சமயத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவுக்கே உரியது.

அவரது மறைவு இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு ஒரு பேரிழப்புத்தான்.

# இறுதி யுத்தம் முறை தவறு என்று ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியமையால் அமைச்சு பதவியிழந்தார்!

## தமிழர் உரிமைக்காக குரல் கொடுத்த ஒருவர் மங்கள என்கிறார் சுமந்திரன்



முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கொவிட் தொற்றுக் காரணமாக காலமானார், அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் முகப்புத்தகத்தில் இட்டுள்ள பதிவில் செவ்வியொன்று வழங்கும் போது தெரிவித்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில், "மங்கள சமரவீர அவருடைய அரசியல் வாழ்க்கையில் ஒரு போதும் பாகுபாட்டைக் காட்டியவரல்லர். அவர் தமிழ் மக்களுக்கு சரியான விதத்தில் நீதி எட்டப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டவர். அவர் தாராளவாத சிந்தனைகளைப் பின்பற்றியவர்.

"யுத்த காலத்தை எடுத்துக் கொண்டால், 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகிய போது இவர் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

"ஆனால் போர் முடிவுக்கு வருகின்ற தருவாயில் 'நீங்கள் போரை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமாக இருந்தாலும் நீங்கள் அதனைக் கையாளும் முறையில் எனக்கு எந்தவித உடன்பாடும் இல்லை" என ஜனாதிபதிக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியிருந்தார்.

"இதன் காரணமாக அவருடைய அமைச்சுப் பதவியை இழந்திருந்தார். இவ்வாறாக பற்பல சந்தர்ப்பங்களில் அவர் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த ஒருவர் என்பதை நாம் கண்டுகொண்டுள்ளோம்" - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனித நேயத்தை மதிக்கும் யுகபுருஷர் மங்கள சமரவீர

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வேதனை



முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது முகநூலில் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் -

'மனித நேயத்திற்கு கௌரவமளித்து மனசாட்சியின் அடிப்படையில் தான் நம்புகின்ற கோட்பாட்டுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட யுகப் புருஷரான எமது நண்பர் மங்கள சமரவீர அவர்களே உங்களின் ஆத்மா சாந்தியடையட்டும்.' - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நான் போற்றிய ஒருவரே மங்கள வருத்தம் வெளியிட்டுள்ள நாமல்



முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவு செய்தி அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமீபத்திய காலங்களில் எங்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துகள் இருந்தபோதிலும், ஓர் அரசியல்வாதியாக நான் போற்றிய ஒருவர்! அவரது மறைவு நமது தேசத்துக்கும் மக்களுக்கும் உண்மையான பேரிழப்பு. உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தனது இரங்கல் செய்தியில் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளார்.

# முன்னாள் நிதியமைச்சர் மங்கள ஒரு தேசபக்தர் மற்றும் தலைவர்

## அமெரிக்க தூதுவர் அஞ்சலி



இலங்கையின் முன்னாள் அமைச்சர் மங்களவின் மறைவிற்கு அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்தப் பதிவில் -

மங்கள சமரவீரவின் மறைவுக்கு அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் இலங்கை மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள் - ஒரு தேசபக்தர், மனிதாபிமானி மற்றும் ஒரு தலைவர்.

அமைதி மற்றும் ஜனநாயகத்துக்கான அவரது ஆர்வம் அணைக்க முடியாத ஓர் உத்வேகம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகும் கர்ப்பிணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொரோனாத் தொற்று நோயால் பாதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது என குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் இயக்குநர் வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கர்ப்பிணித் தாய்மாருக்கு தடுப்பூசி செலுத்தும் விசேட வாரம் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகியது. தடுப்பூசி செலுத்த எதிர்பார்த்திருக்கும் தாய்மார் இவ்வாரம் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும், இதுவரை 27 கர்ப்பிணித் தாய்மார்கள் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளமையுடன் 850 கர்ப்பிணித்தாய்மார்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

## அங்கம் -55

ந.வித்தியாதரன்



ஊடகத்துறையில் – குறிப்பாகப் பத்திரிகைத்துறையில் – ஒருவரின் சாதனையை அல்லது பெறுபேற்றை அளவிடுவது எப்படி?

அச்சில் வந்த அவரது செய்திகள், கட்டுரைகள், ஆக்கங்கள், விவரணங்கள் போன்றவற்றை வைத்தா?

இவை அவரது தகுதியை – திறமையை – அளவிடவும் மதிப்பிடவும் உரியனவாக இருக்கலாம். ஆனால் அவர் பத்திரிகைத் துறைக்கு ஆற்றிய சேவையைக் கணக்கெடுக்க போதுமானவை அல்ல. சிவநாயகம் ஐயாவின் பேனாவிலிருந்து ஊற்றெடுத்த ஆக்கங்கள் மெச்சிப் புகழத்தக்கவை. சிறப்பும் புலமைத்துவமும் மிக்கவை. ஆனால் அவற்றை மட்டும் அவரின் திறமைக்கான சான்றாக நான் கருதவில்லை. அதையும் தாண்டி ஓர் அற்புதமான விடயம் உண்டு. அதைத்தான் செந்நாப்போதகன் தமிழ்மறை தந்த வள்ளுவன் அழகாகச் சொன்னான்:-

*“தக்கார் தகவிலார் என்பது அவரவர்*
*எச்சத்தாற் காணப்படும்”*

ஒருவருடைய தகுதி அவரது எச்சத்தால் அளவிடப்படும் என்பது இதன் பொருள். ஒரு பத்திரிகையாளரின் எச்சம் என்பது அவர் எழுதியவை, சாதித்தவை, வெளியிட்டவை என்பவை மட்டுமல்ல. அதற்கு அப்பாலும் உண்டு. அதுதான் சிவநாயகம் ஐயா விட்டுச் சென்றார். அந்த எச்சத்தால்தான் அவர் நோக்கப்பட வேண்டும் என்பது என் கருத்து.

அதற்கு முதல் ஒரு சம்பவத்தை நினைவு கூர விரும்புகிறேன். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட பிரமுகர்கள், நபர்களின் பெயர்களைக் குறிப்பிடுவது நாகரிகமன்று. ஆனால், இது உண்மைச் சம்பவம். எதுவும் புனையப்பட்டது அல்ல.

அவர் ஒரு பத்திரிகைத் துறை நிர்வாகி. கள்ளமில்லா நெஞ்சினன். வஞ்சமில்லா மனதினன். வெளிப்பட பேசும் அப்பாவி மனிதர். தமது நிறுவனத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் மீது கோபம் வந்தால் – தான் பிழை கண்டுபிடித்தால் – அவர்களைப் பணியிடமாற்றம் செய்வார். ஆனால் வயிற்றில் அடிக்க இடம் விடார். அந்த ஊழியனுக்கு உரியவை ஒரு சதம் குறையாமல் மாதாந்தம் கிடைப்பதை ஒன்றுக்கு, இரண்டு தடவைகள் உறுதி செய்வார். அதனால்தான் மனதில் வஞ்சமில்லா நெஞ்சினன் என்றேன். ஒரு சொற்ப காலமாவது அவரின் கீழ் ஊடகவியலாளனாகப் பணியாற்றி அவருக்கு இத்துறையில் மற்றொரு பக்க மாண்பை எடுத்துக்காட்ட எனக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் என்றும் எனக்கு உண்டு.

அவரது ஊடகத்தில் பல வெளியீடுகள். பல பிரிவுகள். ஆனால், ஒரே நிறுவனத்தில் இருந்து, ஒரே நிகழ்வைக் ‘கவர்’ பண்ண பல கமராமேன்கள், பல செய்தியாளர்கள் பல அணிகளாகத் தனித் தனியே செல்லும் அளவுக்கு ஊடக நிறுவனத்தைப் பிளவுபடுத்தி வைத்திருந்தனர் அங்கிருந்த பிரகிருதிகள்.

அந்தப் பிளவுக்கு ஓர் உதாரணம். 2002 ஆம் ஆண்டு வன்னியில் தலைவர் பிரபாகரன் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். யாழ்ப்பாணத்தில் ‘உதயன்’ – ‘சஞ்சீவி’ நிறுவனத்திலிருந்தும் கொழும்பில் ‘சுடர் ஒளி’ – ‘சுடர்ஒளி வாரவெளியீடு’ ஆகியவற்றில் இருந்தும் ஒரே ஒரு பிரதிநிதி. அது நான் மட்டுமே.

ஆனால் நான் குறிப்பிடும் மேற்படி ஊடக நிறுவனத்தில் இருந்து கமரா அணிகள் மாத்திரம் நான்கு. செய்தியாளர்களோ ஏழெட்டுப் பேர். ஒவ்வொரு பிரிவையும் குறிப்பிட்டு எல்லாமாக ஏழெட்டு வாகனங்கள் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்குப் படை எடுத்தன. அந்நிறுவனத்தின் பேரில் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் சிலர் வந்து இருந்தனர் என்றும் நினைவு உண்டு. சில சமயங்களில் தலைவர் பிரபாகரனை நேரில் காணும் விருப்பத்தில் இத்தகைய படையெடுப்போ நானறியேன்.

ஆனால் பழமையான – வசதியான – அந்த ஊடகத்தின் தரப்பில் ஒரே வேலையைப் பிரித்துப் போட்டு பணியாற்ற ஒன்பது குழுவினர் இருந்தனர். அவ்வளவு தூரம் பிரச்சினை, பிளவுகள்.

அங்கிருந்த இரண்டு பிரதானபிரிவுகளின் ஆசிரியர் பீடப் பொறுப்பாளர்களுக்கு இடையில் இருந்த சில்லெடுப்பு அப்போது தமிழ் ஊடக வட்டாரங்களில் ஒரு பிரதான பேசுபொருளாக இருந்தது. யாரேனும் எழுத்தாளர், செய்தியாளர், ஆக்க இலக்கிய கர்த்தா அவருடன் தொடர்பு வைத்தால் இவருக்குப் பிடிக்காது. உடனே இவர் கத்தரிக்கோலை கூர்மைப்படுத்தி அந்த நபரைக் கத்திரித்துத் தள்ளுவதில் முனைப்பாக நிற்பார். ஓரங்கட்டுவார். அதற்குத் தாம் சளைத்தவரல்லர் என்று மற்றவரும் அதே பாணியில் முனைப்பாக இருப்பார். இப்படி இரண்டு பிரகிருதிகளின் தலைமையில் அந்த ஊடக நிறுவனத்தின் பெயர் கப்பலேறிக் கொண்டிருந்த காலம் அது.

ஒரு தடவை ஏதோ ஓர் அழைப்பை நேரில் கொடுப்பதற்காக அந்த நிறுவனத்தின் நிர்வாகியிடம் – அந்தப் பெரிய மனிதரிடம் சென்றிருந்தேன். இரண்டு பிரிவுகளின் பொறுப்பாளர்களின் இந்த குடுமிப்பிடி சண்டை அவரின் மனதை நெருடி இருக்கும் போல. ஆனால் அவர் ஜென்டில்மேன். நேரடியாக ஆள்களை, விடயத்தைக் குறிப்பிடாமல் தமது பணியாளர்களின் ஒற்றுமையின்மை குறித்து மனம் வெதும்பினார். நான் குறிப்பால் அறிந்து கொண்டேன். ஆனால் நானோ பெயர் குறிப்பிட்டு வெளிப்படையாகப் பேசினேன்.

*“இருவருமே தத்தமது ஆக்கங்கள் என்று எழுதியவற்றை கொண்டு வருவார்கள். தங்கள் வெளியீட்டில் இன்ன இன்ன விடயம் தனித்துவமாக வந்தன என்று பீற்றுவார்கள். தமிழ் ஆழமாக வாசிக்க முடியாத உங்கள் முன்னால் தாம் எழுதியவை என்று படம் காட்டுவார்கள். விநியோகம் தங்களால் எகிறி இருக்கின்றது என்று கதை விடுவார்கள். உங்களைப் புகழ்வார்கள். இதெல்லாம் நடக்கும், நடக்கின்றன என்று எனக்குத் தெரியும். ஆனால் இவை அல்ல ஓர் ஊடகவியலாளனின், ஊடக வழிகாட்டியின் திறமையை அளவிடுபவை. அது வேறு மாதிரி”* – என்றேன் நான்.

*“வேறு மாதிரியா? அது என்ன?”* – என்று கேட்டார் அந்த நிர்வாகி. நல்ல மனுஷன்.

*“இந்த இருவரும் ஊடகத்துறையில் எத்தனை பேரை வளர்த்து விட்டார்கள் என்று பாருங்கள். டசினுக்கு மேற்பட்ட வருடங்கள் உங்கள் ஊடகத்தில் தகுதியான, நல்ல சம்பளம் வழங்குகின்ற பதவிகளில் இருந்திருக்கின்றார்கள். இத்துணை வருடங்களின் பின்னர் இவர்களில் யாராவது ஒருவர் தங்களை வளர்த்து விட்டார்கள் என்று யாரேனும் ஒரு செய்தியாளன் தானாக வந்து உங்களிடம் சொல்வானா? இவர்களினால் ஊடகத்தில் இருந்து விரட்டப்பட்டனர் என்று சொல்வதற்கு ஆகக் குறைந்தது இரண்டு டசின் திறமைசாலிகள் இன்று வெளியில் இருக்கின்றார்கள். அதை முதலில் கவனியுங்கள். நீங்கள் வழங்கிய உயரிய பதவியில் இருந்து கொண்டு – பல வருடங்கள் அப்பதவிகளை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு – பெயர் சொல்ல ஒரு சிஷ்யனைக் கூட உருவாக்காத சுயநலவாதிகள் இவர்கள். இத்தகையோருக்கு இடம் அளித்து, போஷித்த பாவம் நிர்வாகி என்ற முறையில் உங்களுக்கும் உள்ளது. நீங்கள் இருக்கும் கதிரைக்கு உரிய நிறுவனம் மூலம் பல நூறு தமிழ் ஊடகவியலாளர்களை உருவாக்கி சமூகத்துக்கு தந்திருக்க முடியும்.”* – என்று ஆவேசப் பாணியில் – அதேநேரம் மென்மையான சொற்களில் – நான் எடுத்துரைத்தேன். அவர் புரிந்து கொண்டார்.

இந்த இரண்டு பிரகிருதிகள் மூலமாகவும் தனது நிறுவனம் செய்ய முடியாமல் போன விடயத்துக்குப் பிராயச்சித்தமாக, வேறு வழிகளில் ஊடகவியலாளர்களை பயிற்றுவித்து, மேம்படுத்தி சமூகத்துக்கு அளிக்கும் பெரும் கடமையை அந்த நிர்வாகி இன்னும் செய்து வருகின்றார். அதன்மூலம் தனது சமூகக் கடமையை நிறைவேற்றி வருகின்றார்.

சுமார் கால் நூற்றாண்டு ஊடகப் பணிக்குப் பின்னர் அந்த இருவரும் இப்போது திரும்பிப் பார்த்தால் அவர்கள் உருவாக்கி விட்டவர்கள் என்று அவர்களைப் பார்த்து கூற யாருமில்லை என்பது புலனாகும். யாரும் தாமாக முன்வந்து அந்த இருவரில் ஒருவர் உருவாக்கிவிட்டவர்கள் நாம் என்று சான்றளிக்க மாட்டார்கள்.

ஆனால் சிவநாயகம் அப்படியல்லர். தமது எழுத்தின் மூலம் – ஊடக அனுபவம் மூலம் – தமது திறமையை ஜொலிக்கப் பண்ணினார் என்றால், அதையும் தாண்டி தான் உருவாக்கிவிட்ட ஊடகவியலாளர்கள் மூலம் ஒரு நிறைவான ஊடக சந்ததியை அவர் நிலைநிறுத்தியும் சென்றார். கே.கே.இரத்தினசிங்கம், ம.வ.கானமயிலநாதன், என்.பத்மசீலன், மதியழகனில் தொடங்கி கடைசியாக தினகரன் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற குணராசா வரை அவரது பண்ணையில் வளர்ந்தவர்கள்தான் பலர். அந்தப் பட்டியல் நீண்டது.

அதேபோல ‘உதயன்’, ‘சுடர்ஒளி’ பண்ணையில் – எங்கள் பராமரிப்பில் – முகிழ்ந்த ஊடகவியலாளர்கள் பலர் இருக்கின்றார்கள் – இரத்தினசிங்கம், கானமயிலநாதன், பத்மசீலன் மற்றும் என் பெயர் சொல்வதற்கு.

அவர்கள் அடுத்த தலைமுறையினர். தொழில்நுட்பத்திலும் நவீன ஊடக கற்கை நெறி மூலமும் எங்களை விட இத்துறையில் பல மடங்கு உயர்ந்து விட்டவர்கள். ஆனாலும் அத்துறையின் ஆரம்ப அறிவைப் புகட்டியவர்கள் என்ற ரீதியில் எங்கள் மீது மதிப்பு வைத்திருப்பவர்கள். இன்னாரிடம் பத்திரிகைத் துறையைப் படித்தோம் என்று நன்றியுடன் நினைவு கூர்வார்கள்.

எந்தப் பெரிய விஞ்ஞானியாக – நாசா அதிகாரியாக – இருந்தாலும் கூட ஆரம்பப் பாடசாலையில் ஆனா, ஆவன்னா கற்றுத்தந்த பாலர் பாடசாலை ஆசிரியரை கண்டதும் அந்த விஞ்ஞானி எழுந்துநின்று மதிப்பதில்லையா, தனது குருவென்று வணங்குவதில்லையா? அதுபோலத்தான் இன்று ஊடகத் துறையில் பெரும் புள்ளிகளாக – பத்திரிகைகளின் ஆசிரியர்களாக – ஊடக நிர்வாகிகளாக – உயர்ந்து விட்ட, தகுதியிலும் திறமையிலும் பதவியிலும் எங்களை விஞ்சி நிற்கின்ற பலரின் மதிப்பு எங்களுக்குக் கிட்டுகின்றது என நான் நினைக்கிறேன்.

யுத்தத்துக்கு மத்தியில் நான் ஆற்றிய எழுத்துப் பணியை விட – செய்திகளைத் துணிச்சலுடன் வெளிக்கொணர்ந்தமை மூலம் செய்த சமூக கடமையை விட – தகுதியுள்ள ஓர் ஊடகப் பரம்பரையை வாண்மையுடன் விருத்தி செய்ய நாங்கள் ஆற்றிய சேவைதான் மேம்பட்டது என்று நினைக்கிறேன்.

அதிலே முத்திரை பதித்து ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையில் கடமையை நிறைவு செய்த பெரியார் எஸ்.டி.சிவநாயகம். அந்த எச்சத்தின் மூலம் அவரின் தகுதியைக் கணக்கிட்டால், அவரது திறனை இத்துறையில் யாரும் விஞ்சவே முடியாது என்பது புலனாகும். அதனால்தான் அவரை ஊடக ஜாம்பவான் என்கிறோம்.


(வளரும்...)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021


தரம் - 06 | கணிதம் | அலகு 15

## நீளம்


**வட்டம்**



**மையம்**





**ஆரை**




வட்டத்தின் மையத்தையும் வட்டத்தின் மீதுள்ள புள்ளியையும் இணைக்கும் கோடு அவ்வட்டத் தின் ஆரை எனப்படும்.


**விட்டம்**



மையத்தினூடாகச் செல்லுமாறு வட்டத்தின் மீதுள்ள இரண்டு புள்ளிகளை இணைக்கும் கோட்டுத் துண்டம் விட்டம் எனப்படும்.

விட்டம் = ஆரை X 2

**01.**




வரிப்படத்தில் உள்ள வட்டத்தின்
i) மையத்தினைப் பெயரிடுக.
ii) ஆரைகளை பெயரிடுக.
iii) விட்டத்தைப் பெயரிடுக.

**02.** i) ஆரை 4cm ஆகவுடைய வட்டமொன்றை வரைக.
ii) வட்டத்தின் மையத்தை O எனவும் வட்டத்தின் மீதுள்ள ஒரு புள்ளி M எனவும் பெயரிடுக.
iii) MO என்ற கோட்டை வரைந்து அது வட்டத்தை N என்ற புள்ளியில் சந்திக்குமாறு நீட்டுக.
iv) MN என்ற கோட்டின் சிறப்பு பெயர் யாது?
v) MN நீளத்தை அளந்து எழுதுக.

**ஆக்கம் : திரு. பா.லாவண்யா**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி கம்சானந்தி முகுந்தன்**
**விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 06 | கணிதம் | அலகு 15

## நீளம் - விடைகள்

பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக

| சந்தர்ப்பங்கள் | பொருத்தமான உபகரணம் | அலகு |
|---|---|---|
| உமது கணிதபாடப்புத்தகத்தின் நீளம் | 30cm அடிமட்டம் | cm |
| ஆசிரியரின் மேசையின் உயரம் | மீற்றர் கோல் | cm |
| வகுப்பறையின் நீளம் | உருக்கு அளவுநாடா | m |
| பரீட்சை மண்டபத்தின் நீளம் | துணி அளவுநாடா | m |
| உமது கொப்பியில் வரையப்பட்ட கோட்டின் நீளம் | 15cm அடிமட்டம் | cm |

A.
1. 40mm 2. 80mm 3. 26mm 4. 34mm 5. 18mm

B.
1. 57mm 2. 64mm 3. 49mm 4. 34mm 5. 21mm

C.
1. 4cm 2. 10cm 3. 2.5cm 4. 12.5cm 5. 50.5cm

D.
1. 500cm 2. 1000cm 3. 225cm 4. 605cm 5. 2005cm

E.
1. 425cm 2. 250cm 3. 604cm 4. 1005cm 5. 750cm

F.
1. 5m 2. 10m 3. 6.5m 4. 7.25m 5. 10.05m

G.
1. 4000m 2. 8000m 3. 7500m 4. 3250m 5. 6125m

H.
1. 5125m 2. 4320m 3. 2025m 4. 10001m 5. 25005m

I.
1. 5km 2. 4km 3. 6.25km 4. 0.75km 5. 2.045km

பின்வரும் தளவுருக்களின் சுற்றளவு
1. 24cm 2. 46cm 3. 15cm 4. 36cm 5. 37cm

**ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் : திருமதி சுதர்சினி விக்னமோகன்**
**விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

# களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையால் கைத்துப்பாக்கி மற்றும் மகசின்கள் மீட்பு



மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காங்கேயனோடை பகுதியில் கைத்துப்பாக்கி மற்றும் மகசின்களை களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

களுவாஞ்சிகுடி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த கைத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

காங்கேயனோடையில் உள்ள வெற்றுக் காணியொன்றில் கைவிடப்பட்ட நிலையிலிருந்தே இந்த கைத்துப்பாக்கி மற்றும் மகசின்களை அதிரடிப்படையினர் மீட்டுள்ளனர்.

குறித்த காணிக்குள் துப்பாக்கியை வீசிவிட்டுச்சென்றுள்ளதாகவும் கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் மகசின்கள் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

# பெருந்தோட்டங்களை ஆக்கிரமிக்கின்றது சீனா?

## எம்.ஏ.சுமந்திரன் குற்றச்சாட்டு



மலையகப் பெருந்தோட்டங்களை சீன நிறுவனங்கள் ஆக்கிரமிப்புச் செய்யக் கூடிய சூழ்ச்சிகள் நடக்கின்றன என அறியக்கிடைத்துள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சம்பளப் பிரச்சினையை ஒரு சட்டப் பிரச்சினையாகமட்டும்பார்க்காமல்அதனை இன்னும் விரிவாக அணுக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இணையவழி ஊடாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பியிடம் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிணக்கு தொடர்பான அவரது சட்ட ஆலோசனை என்ன என்பது குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கூட்டு ஒப்பந்தம் நிராகரிக்கப்படுகின்ற விடயங்களின்போது சட்ட உதவிகளைச் செய்திருக்கின்றேன்.

தற்போது ஆயிரம் ரூபா விவகாரத்தை எடுத்துக்கொண்டால், ஆயிரம் ரூபா சம்பளம் கொடுக்க வேண்டும் என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது.

ஆனால், இது தொடர்பில் இன்னமும் பிரச்சினை இருக்கின்றது. தற்போதுள்ள நிறுவனங்களை நட்டமடையச் செய்து, நிறுவனங்களைக் கொண்டு நடத்த முடியாத சூழ்நிலைக்குத் தள்ளிவிட்டு, வெளிநாட்டு நிறுவனங்களைக் குறிப்பாகச் சீன நாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் சூழ்ச்சி நடப்பதாகவும் கேள்விப்பட்டுள்ளேன்.

ஆனால், இதில் எந்தளவு உண்மை இருக்கின்றது என்பது தெரியவில்லை. ஆகவே, சம்பளப் பிரச்சினையை ஒரு சட்டப் பிரச்சினையாகப் பார்க்காமல் சற்று விரிவாக அணுக வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

# நீதித்துறை மீது இன்னமும் நம்பிக்கை உண்டாம்

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றது

கொழும்பு, ஒக. 25

நீதிச்சேவைகள் ஆணைக்குழு எவ்வாறு செயற்பட்டாலும் இந்த நாட்டின் நீதித்துறை தொடர்பில் எமக்கும் இன்னும் நம்பிக்கை உள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படப்போவதாகக் கூறியமைக்காக கனியவளத்துறை பொதுச் சேவையாளர் சங்கத்தின் இணைப்பாளர் ஆனந்த பாலித்த கைதுசெய்யப்பட்டார்.

எனினும், எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முயற்சியால் எமது சட்டத்தரணிகள் முன்னிலையாகி அவரைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்தனர்.

இதன்போது நீதிவான் மிக முக்கியமான ஒரு விடயத்தைக் கூறினார். கருத்துக் கூறும் சுதந்திரத்துக்குப் பொலிஸாரால் பாதிப்பு ஏற்படுத்த முடியாது. ஆனந்த பாலித்த கூறிய கருத்தில் பொய்யான விடயங்கள் எதுவும் இல்லை என்று நீதிவான் தெரிவித்திருந்தார்.

போலியான தகவலால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டிருப்பின் அது ஆனந்த பாலித்த தெரிவித்த கருத்தால் இல்லை. அரசிடம் டொலர் இல்லை. இதன்காரணமாகவே எரிபொருள் விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, எரிபொருளை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள் என்று அமைச்சர் உதய கம்மன்பில கூறியதன் காரணமாகவே மக்கள் மத்தியில் எரிபொருள் தொடர்பில் அச்சநிலை ஏற்பட்டது எனவும் எமது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

அவ்வாறான கருத்தைக் கூறிய அமைச்சர் வெளியில் இருக்கும் போது உண்மையான கதையைக் கூறியவரை ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு முயற்சித்த கீழ்த்தரமான அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் தொழிற் சங்கமான ஐக்கிய சேவை சங்கம் கண்டனம் தெரிவிக்கின்றது.

அதேபோன்று நீதிச் சேவைகள் ஆணைக்குழு எவ்வாறு செயற்பட்டாலும் இந்த நாட்டின் நீதித்துறை தொடர்பில் எமக்கும் இன்னும் நம்பிக்கை உள்ளது. -என்றார்.

# தேர்தல்கள் ஆணையர் தீவிர சிகிச்சைப் பிரிவில்!



தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு கொவிட் தொற்று உறுதியான பின்னர்கண்டியில் உள்ள அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், திடீரென மூச்சு எடுப்பதில் சிரமம் ஏற்பட்டதால், சுகாதாரப் பிரிவினரால் தெல்தெனிய வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

பின்னர் அவர், தெல்தெனிய வைத்தியசாலையில் இருந்து கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழக வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவருக்கு ஒட்சிசன் வழங்கப்பட்டு அவரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமன் ஸ்ரீ ரத்நாயக்கவுக்கு கொவிட் தொற்று இருக்கின்றமை கடந்த வாரம் கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் டெல்டா திரிவு எண்ணிக்கை 4 ஆக உயர்வு!

## வெளியாகியுள்ள தகவல்

இலங்கையில் டெல்டா வைரஸின் நான்கு வகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு உயிரியல் ஆய்வுகள் பிரிவின் பேராசிரியர் நீலிகா மலவ்கே இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாகப் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அனைத்து இலத்திரனியல் ஊடகங்களும் ஒன்றிணைந்து ஒளிபரப்பிய விசேட நிகழ்வொன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பேராசிரியர் நீலிகா மலவ்கே டெல்டா வைரஸ் வகையின் திரிவுகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் கண்டறியப்பட்ட 4 ஆவது டெல்டா பிறழ்வு தொடர்பாகத் தமக்கு அறிவிக்கப்படவில்லை என சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியக இயக்குநர் வைத்தியர் ரஞ்சித் படுவந்துடாவ செய்தியாளர்களிடம் பேசிய போது இதனைக் கூறியுள்ளார்.

தமது அலுவலகத்துக்கு 4 ஆவது பிறழ்வு உறுதிப்படுத்தல் கிடைக்கவில்லை எனவும், இலங்கையில் கண்டறியப்பட்ட டெல்டா வகையின் மூன்று பிறழ்வுகள் பற்றி அதிகாரபூர்வமாக அறிந்திருக்கிறேன் என பட்டு வந்துடாவ கூறியுள்ளார்.

# உலகளாவிய கொரோனா மரணங்களின் தரவரிசையில் இலங்கை 13 ஆவது இடம்!

நாளாந்தம் நிகழும் உலகளாவிய கொவிட் தொற்று உயிரிழப்புகளின் தரவரிசையில் இலங்கை 13 ஆவது இடத்தில் இருக்கின்றது.

இலங்கையில் கொவிட் - 19 தொற்றுநோய் பரவ ஆரம்பித்த 2020 மார்ச் 11 இல் இருந்து, கொவிட் வழக்குகளின் அதிகபட்ச நாளாந்த எண்ணிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை பதிவு செய்யப்பட்டது.

அன்றைய தினம் 4 ஆயிரம் 304 பேர் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஒரு நாளில் இலங்கையில் கொவிட் நோய் தொற்றுகளின் எண்ணிக்கை 4 ஆயிரத்தைத் தாண்டியது இதுவே முதல் முறை.

இதற்கிடையில், ஒகஸ்ட் 21 ஆம் திகதி மேலும் 183 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார சேவைகள் இயக்குநர் ஜெனரல் உறுதிப்படுத்தினார்.

இலங்கை கடந்த திங்கட்கிழமை 194 கொவிட் மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன்படி, நாளாந்த கொவிட் உயிரிழப்புகளின் அடிப்படையில் இலங்கை உலகளவில் 13 ஆவது இடத்தில் இருக்கின்றது.

12 ஆவது இடத்தில் அமெரிக்கா உள்ளது. 24 மணி நேரத்தில் அமெரிக்காவில் 198 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன. எனினும், அமெரிக்காவில் 330 கோடி மக்கள் இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், 2.18 கோடி மக்கள் தொகை கொண்ட இலங்கையில் நாளாந்தம் பதிவாகும் கொவிட் மரணங்கள், தொற்றுநோய் தீவிரத்தை தெளிவாகக் காட்டுகின்றது. - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்புலன்ஸ் சாரதி ஒருவர் கொவிட் தொற்றால் சாவு!

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் சேவையாற்றி வந்த நோயாளர் அம்புலன்ஸ் சாரதி ஒருவர், கொவிட் வைரஸ் தொற்றால் மரணமடைந்துள்ளார்.

சுமார் 20 வருடங்களாக நோயாளர் அம்புலன்ஸ் சாரதியாகச் சேவையாற்றி வந்த நிவித்திகல பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய பி.எப்.அமரவீர என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவர் கடந்த பல நாள்களாக கொவிட் நோயாளர்களை நோயாளர் அம்புலன்ஸில் ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டு வந்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது சடலம் இரத்தினபுரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொவிட் தொற்றுக்குள்ளான நிலையில் இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தலிபான்களின் அங்கீகாரம் தொடர்பாக அரசிடம் ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை, அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கும் இலங்கை அரசாங்கத்தின் முடிவு தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

ஊடகங்களுக்கு இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி, அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சுதத் ஜயசுந்தர, இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தலிபான்களை அங்கீகரித்ததன் அடிப்படையில், தீவிரவாதக் குழு ஒன்று அதிகாரத்திற்கு வந்ததை முதலில் அங்கீகரித்த நாடுகளில், இலங்கையும் உள்ளடங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல நாடுகள், எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கின்றன. அத்துடன் ஆப்கானிஸ்தான் நாட்டில் அதிகாரபூர்வமாக நிர்வாகத்தை உருவாக்காத ஒரு குழுவை, இலங்கை அரசாங்கம் அங்கீகரித்துள்ளமை தொடர்பாக அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

2001 இல் ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தலைமையிலான கூட்டணியால், தலிபான்கள் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டனர். அந்த நேரத்தில் அமெரிக்காவில் 9/11 தாக்குதலுக்கு காரணமான அல்குவைதா போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு அடைக்கலம் வழங்க தலிபான் பொறுப்பாக இருந்தது.

இன்றுவரை தலிபான்கள் அல் குவைதா போன்ற பயங்கரவாத அமைப்புகளுடன் உறவைக் கைவிடவில்லை, இந்தநிலையில் அவர்களின் அதிகாரத்தை, இலங்கை அரசாங்கம், ஏற்றுக்கொள்வது, பயங்கரவாத அமைப்புகளை ஊக்குவிக்கும் செயலாகும். பயங்கரவாதக் குழுக்களால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நாடாக, இலங்கை அரசாங்கம் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியம்.

ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலைகளை அழிப்பதற்கு காரணமான ஒரு குழுவை, ஏன் இலங்கை அரசாங்கம் அங்கீகரித்தது என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சுதத் ஜயசுந்தர கேள்வி எழுப்பியுள்ளார். தலிபான்கள் தொடர்ந்து பெண்களிடம் தவறாக நடந்து கொள்கின்றமை தொடர்பாக ஜெயசுந்தர கவலை தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் தலிபான்களை அங்கீகரிப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் முடிவு, சரியான ஆலோசனை இல்லாமல் அவசரமாக எடுக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச அரங்கில் இலங்கையை கேலிக்குள்ளாக்கும் செயலாகும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் தெரிவித்துள்ளார்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 110

**317. இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு ஏதும் உதவிகள் தரப்பட்டனவா?**

இது ஒரு பாரிய மனித அவலம். அந்த அவலங்களின் தாக்கங்களைக் கணக்கெடுத்து, அந்த குடும்பங்களின் மீள் வாழ்வாதாரங்களுக்கான திட்டங்களுடன் ஏதும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. போர் பகுதியில் நடந்த அவலங்களால், தங்களுக்கு, தங்கள் குடும்பத்தினருக்கு நேர்ந்த அனர்த்தங்களினால் இராணுவத்தால் பிடிக்கப்பட்டு அல்லது கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் மக்கள், ஒவ்வொரு தேவையுடன் அலைந்து கொண்டிருந்தார்கள். போரின் பயங்கரத்தால், அதைப் பார்த்து அனுபவித்த கோரங்களினால், மனப்பாதிப்புக்கு ஆள்பட்டு நடைபிணங்களாகத்தான் இருந்தார்கள் என்று சொல்லலாம். அவர்களை மீள மனிதராக்குதற்குரிய மனிதாபிமானத் திட்டங்களை யாரும் பார்க்கவில்லை.

சர்வதேச அரசாங்கங்களும் அமைப்புக்களும் பாதிக்கப்பட்ட முகாம்களின் பராமரிப்புக்காகவும் அவர்களின் வாழ்வாதாரத்துக்கான முன் உதவிகளாகவும் சிலவற்றைச் செய்தன. ஆனால் தேவைகளோ எண்ணிலடங்கா. முகாம்களில் மக்களுக்கு உண்ண உணவும் தலைசாய ஒரு இடமிருந்தது. வானத்தில் இருந்து குண்டுகளோ, எல்லாப் பக்கத்திலிருந்தும் துப்பாக்கி, இராணுவப் பீரங்கிகளின் முழக்கங்களோ இல்லை. ஆனால், அடிக்கடி இராணுவத்தினரின் நடமாட்டமும் பல தேவைகளுக்கு அவர்களிடமே போக வைத்ததும் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளும் அவர்களைப் பயமுறுத்தின. அடுத்த வேளை எங்கேயோ, என்ன மாதிரியோ என அவர்கள் தவித்தார்கள்.

மனிதாபிமான மீள்குடியேற்றத்துக்குப் பதிலாக மக்கள் முகாம்களுக்குள் அடைக்கப்பட்டமை இராணுவ ரீதியான ஒரு முன்னேற்பாடு. அதுவே கேந்திரமானதாகவும் தெரிந்தது. அது, விடுதலைப் புலிகளின் அங்கத்தினர்கள், அவர்களது ஆதரவாளர்கள் யாராவது மக்களோடு மக்களாக உள்வந்து முகாம்களிலிருந்து, ஏதோ ஒரு விதத்தில் வெளியேறி, பொதுவெளியில் செறிந்து விடக்கூடாது என்பதற்கானதாக இருந்தது. அதிலேயே முழுக் கவனமும் இருந்தது. அதற்காக, முகாம்களிலுள்ள பலர் விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டனர். யார் யாரோடு வந்து, அப்படிக் கூட்டி செல்கிறார்கள் என்பதையும் மக்கள் தெரிந்து கொள்ளக் கூடியதாயிருந்தது. அப்படியான ஒரு மக்களின் மீட்பு, கரை வலைகளைப் போட்டு இழுத்து, எல்லா மீன்களையும் கரைக்கு எடுத்து, எது தேவையோ அதை தேடிப் பொறுக்குவது போல்தான் இருந்தது. மக்களை முகாம்களில் வைத்து தேடியோர்களை அல்லது தகவல் தரப்பட்டவர்களை அரசாங்கம் பொறுக்கி கொண்டிருந்ததால் நாட்டிலிருந்த உணர்வாளர்கள் இயங்கக் கூடிய அளவில் முகாமிலுள்ளவர்களுக்கு உதவிகள் தந்து கொண்டிருந்தனர். எங்களிலிருந்த புலம்பெயர் குழுவினர் பலர் பின்தங்கி நின்று முகாம்களிலுள்ள மக்களின் உடனடித் தேவைகளை அறிந்து, அவற்றை முன்னிலைப்படுத்தி, அவற்றின் அடிப்படைகளில் சில நடைமுறைத் திட்டங்களை தயாரித்து அவற்றுக்கு நிதிகள் சேர்த்துச் செய்தார்கள். எப்படியான வாழ்வாதார திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன, யார், யாரால் அவை மேற்கொள்ளப்பட்டன என்பவை இந்த ஆக்கத்திற்கு தேவையற்றவ்சி என்பதால் அவற்றை இங்கு விவரிக்கவில்லை. ஆனால் ஒன்று விளங்கிகொண்டு முன்னெடுக்கப்பட்டது. அது, அரசாங்கம் கடலை வற்றச் செய்து மீன் பிடிக்க மக்களை முகாம்களுக்குள் வைத்திருக்க முடியாது. அவர்களை விரைவாகத் தங்களது முன்னைய கிராமங்களில் மீளக் குடியமர்த்த வேண்டும் என்பது. பல விளக்கங்கள் சொல்லப்பட்டன. எல்லாக் கிராமங்களுமே அழிந்த நிலையில் உள்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படாது, அவர்களை மீளக்குடியேற்றுவது கஷ்டம். அவை எல்லாவற்றுக்கும் மேலாக இரு பக்கத்தாராலும் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் மக்களின் பாதுகாப்புக்காக அகற்றப்பட வேண்டும். அரசாங்கப் படைகள் புதைத்தவையை ஓரளவு தெரிந்து கொள்ளலாம். ஆனால் விடுதலைப் புலிகளில் பல பேர் இறந்து விட்டமையால் அவற்றைப் படிப்படியாக அறிந்துதான் செயலிழக்கச் செய்யலாம் என்று கூறப்பட்டது.

ஆனால் செய்யப்பட்ட அழுத்தங்களினால் சர்வதேச தலையீடுகளை ஏற்படுத்தி அன்றைய இந்திய மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவும், அந்த மக்கள் 180 நாள்களுக்குள் முகாம்களிலிருந்து குடியமர்வுகளுக்கு வெளியேற்றப்படுவார்கள் என்று உறுதி கூறினார். ஆனாலும் அதுவும் இழுத்தடிக்கப்பட்டது.

**318. போர் வலயப் பகுதிக்குள் அகப்பட்ட மக்களின் உணவு, மருந்து, தண்ணீர் போன்றவைகளின் தட்டுப்பாடு கட்டுப்பாடுகள் பற்றி செய்திகள் வந்தனவே?**

இதுபற்றி தமிழ் தேசிய கூட்டணி மார்ச் 25, 2009 தங்களது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. அது மட்டுமல்லாமல் அது பல தளங்களிலிருந்தும் பட்டினியும் மருந்தும் உயிர் வாழத் தேவையானவைகளும் மறுக்கப்பட்டு அரசாங்கம் மனுதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் புரிகிறதென்று சர்வதேசத்துக்கும் இடித்துரைக்கப்பட்டது.

அவை பற்றி நாங்கள் ஈடுபட்ட கூட்டங்களில் கேட்டபோது அரசாங்கத்தின் விளக்கங்களையும் குறிப்பிட்டிருந்தேன். முதலாவது ஒரு போரின் சூழலிலோ, அரசியல் போராட்டத்திலோ, உண்மைதான் முதலாவதாக காயப்படும். பொய் மேலெழுந்து, பல காலங்கள் உலகை வலம் வந்து உட்காரும் போதுதான் உண்மை வெளிவரும். கணக்கு சொல்வதும், கணக்கு விடுவதும், கணக்கு காட்டுவதும் ஒரு கலையாக இந்தக் காலங்களில் செயல்படுத்தப்படுகிறது. மக்கள் உணவுப் பற்றாக்குறையினாலும் வாழத் தேவையான அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாட்டாலும், அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மை. ஆனால் எத்தனை பேர், எதற்காக என்ற கேள்வி அரசியலில் முன் னின்று பாதிப்பை பன்மடங்காக்கியது. அவற்றைப் புரிந்து கொள்ள சிலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

JUSTICE AND PEACE COMMISSION - WANNI
ROMAN CATHOLIC DIOCESE OF JAFFNA
St. Theresa's Church, Kilinochchi

HIs Excellency Ban Ki Moon
The Secretary General
United Nations.

Date: 26 August, 2008

Your Excellency,

PROTECT THE PEOPLE OF WANNI

Wanni has been the eye of the war storm for the past two years. Deaths, injuries, displacements and attendant misery pervade the lives of the innocent Tamil civilians. The Draconian economic embargo imposed slyly on Wanni has become a monstrous obstacle even in giving relief and solace to the 170,000 persons recently displaced. Day and night, Wanni is thundering with Artillery Guns, Multi Barrel Rocket Launchers, Supersonic fighter jets and Naval gunboats.

A great human tragedy is exploding in Wanni which is calculatedly concealed from the world outside.

The Sri Lankan Government and its Security Forces with scant regard to, leave alone the Geneva Ethical Codes on the Conduct of War, humanitarian concerns for their fellow citizens, wage an aggressive and ruthless war in Wanni. The sanctity of the civilian settlements, hospitals, schools and places of worship are blatantly violated with impunity.

The Sri Lankan security forces heavily bombard villages after villages forcing the people to flee from their traditional homeland. Not once, but again and again displacements continue. Even before the displaced people begin to settle down in one place, they are shelled to flee again. This inhuman exodus goes on and on. People are languishing under trees and on the waysides under the scorching sun and dusty winds, and in pouring rain and thundering blasts of artillery and mortar shells. Only a few of the displaced take shelter in schools, places of worship and with friends and relatives. All these innocent people continue to live amidst severe deprivations.

The assistance that reach the people from GOs, NGOs, INGOs and the people of goodwill, even though praiseworthy, are not adequate to cater to the basic human needs of theirs. Even though the Government claims to allow all the necessary amenities, essentials such as Tarpaulin sheets, water containers, fuel, medical supplies and food are drastically slashed at the entry-exit points in reality. There are severe restrictions imposed on the movement of the INGOs thus hampering their humanitarian services to the helpless displaced people.

Besides the old and the sick, pregnant women and lactating mothers and children are the most affected ones. School children are subjected to untold hardship and bitter and traumatic experiences. The General Certificate of Education (Advanced Level) examinations is being held in the country now and imagine the plight of these children who are sitting this exam under these tragic conditions. If the situation is such with the grown ups, imagine the plight of Grade 5 children who sat for the scholarship exam on the 17th August, 2008. Epidemics are threatening the people in the absence of sufficient medical facilities. Drinking water has become a scarce commodity.

These innocent people continue to live amidst dire distress.

These fundamental human rights violations strike all over Wanni, and the truth of which doesn't reach the world at large. There are numerous obstacles calculatedly laid across the path of truth so that the dissemination of it is effectively arrested. Instead, diabolic lies are spread with ease. Prevention of the media personnel from entering Wanni and reporting impartially on the horrendous situation of the innocent Tamil people is the most cruel and cunning mode of the repressive violence perpetrated by the Sri Lankan Government.

The call of the hour is urgent. Protect the people of Wanni who are threatened with death and destruction and dehumanization.

This is an ardent appeal from the Justice and Peace Commission - Wanni to the people of goodwill all over the world.

Fr. James Pathinathan,
The President,
Justice and Peace Commission - Wanni

வண.பிதா ஜேம்ஸ் பத்திநாதன் கையளித்த மகஜரின் விவரம்










சரியாக 13 ஆண்டுகளுக்கு முன்னர் 26 ஒகஸ்ட் 2008 இல் கிளிநொச்சியில் பேரணி நடத்தி, மக்களின் அவல நிலைமையை மகஜர் வடிவத்தில் ஐ.நா.செயலாளர்நாயகத்துக்கு முகவரியிட்டு அகதிகளுக்கான ஐ.நா.தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கும் வண.பிதா ஜேம்ஸ் பத்திநாதன்.

# ஒரு நேர்மையான தேசிய வாதியை இந்த நாடு இழந்து தவிக்கின்றது!

## மங்களவின் மறைவு குறித்து ஸ்ரீகாந்தா



ஓர் நேர்மையான தேசியவாதியை, மங்கள சமரவீரவின் மறைவால் இந்த நாடு இழந்து நிற்கின்றது என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலையில், சிகிச்சை பெற்று வந்த நிலையில், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை காலமானார்.

அவரின் மறைவு குறித்து ந.ஸ்ரீகாந்தா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

அரசியல் நீதி கோரி நிற்கும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நன்கு உணர்ந்து கொண்டு, தேசிய ஒற்றுமைக்காக உறுதியுடன் செயற்பட்ட மங்கள சமரவீரவின் திடீர் மறைவு துயரமளிக்கின்றது.

ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் நன்கறியப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்த தனது தந்தையார் மகாநாம சமரவீரவின் அடிச்சுவட்டை பின்பற்றி, 1989 இல் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்த மங்கள சமரவீர, தனது நேர்மையான செயற்பாடுகள் ஊடாக தமிழ் – முஸ்லிம் மக்களின் மதிப்பையும் அபிமானத்தையும் பெற்றுக்கொண்டவர் ஆவார். இன மத வேறுபாடுகள் இன்றி இலங்கைத் தீவின் மக்கள் அனைவரினதும் ஜனநாயக உரிமைகளுக்காக அவர் உறுதியுடன் எப்போதும் செயற்பட்டார். அவரின் மறைவால் துயரமடைந்திருக்கும் அனைவருடனும் நாமும் இணைந்து நிற்கின்றோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்களுக்கு உரிமை கிடைக்கப் போராடிய மங்களவின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது!

## ஐ.தே.க. தெரிவிப்பு

ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டவர் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர ஆவார்.

இலங்கை மக்கள் அனைவருக்கும் அவரவர் உரிமை கிடைக்கப்பெற வேண்டும் என்று போராடிய அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்று ஐக்கிய தேசியக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

முன்னார் அமைச்சர் மங்கள சமரவீர குறித்து ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மங்கள சமரவீர 40 வருட கால அரசியலில் மக்களுக்காகச் சேவையாற்றியுள்ளார். இவரது மறைவு இலங்கை அரசியலுக்கும், சிவில் அமைப்பிற்கும், நாட்டுமக்களுக்கும்பெரும்துயரத்தைஏற்படுத்தியுள்ளது.

மாத்தறை மாவட்டத்துக்கு மாத்திரமல்ல நாட்டில் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ள மக்களுக்காக செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டவர். பல தலைமுறையினர் நினைவில் வைத்துக் கொள்ளும் வகையில் நாட்டுக்காகச் சேவையாற்றியுள்ளார்.

ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டவர். இலங்கை மக்கள் அனைவருக்கும் அவரவர் உரிமை கிடைக்கப் பெற வேண்டும் என்று போராடினார்.

மக்கள் சேவையில் இவர் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி பாராமல் ஒருமித்த வகையில் செயற்பட்டுள்ளார். இளம் தலைமுறையினரை அடிப்படையாகக் கொண்டு அரசியலில் மாற்றம் ஏற்படுத்த முயற்சித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னேற்றத்துக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். ஆளும் மற்றும் எதிர்க்கட்சி என இருதரப்பிலும் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளார்.

நெருக்கடியான நிலையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சிறந்தமுறையில் ஆலோசனை வழங்கியுள்ளார். இவரது மறைவு இலங்கை அரசியலுக்கும், சிவில் அமைப்பிற்கும் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். – என்றுள்ளது.

# கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணம் தமிழ் மக்களுக்கு பாரிய இழப்பாகும்!



சிறையில் உள்ள தமிழ் இளைஞர், யுவதிகளின் விடுதலைக்காகவும் அரசியல் கைதிகளுக்காகவும் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணம் தமிழ் மக்களுக்கு பாரிய இழப்பு என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசாவின் திடீர் மரணம் தொடர்பாக அவர் நேற்று (செவ்வாய்க்கிழமை) விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ள அவர் –

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின் கீழ் கடந்த காலங்களில் கைது செய்யப்பட்டு பல வருடங்களாகச் சிறையில் தடுத்து வைக்கப்படுகின்ற தமிழ் இளைஞர், யுவதிகளின் விடுதலைக்காகவும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவும் நீண்ட காலமாக செயற்பட்டு வந்திருந்தவர் சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசா.

இவரின் இழப்பு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நம்பி இருந்தவர்களுக்கு பாரிய இழப்பாகவே அமைந்துள்ளது.

ஆள்கடத்தல், காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் அரசியல் படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளுக்காக உயர்நீதிமன்றத்தில் வாதங்களை முன்வைத்து உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் பேசப்பட்ட ஒரு பிரபல சட்டத்தரணி திருமதி கௌரி சங்கரி தவராசா ஆவர்.

என்னை அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்தபோது எனது விடுதலைக்காக நீதிமன்றத்தில் வாதாடிஎன்னைபிணையில்செல்ல அனுமதி பெற்றுத்தந்தவர். அவரின் இழப்பை ஈடு செய்ய முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

அவரை இழந்து நிற்கும் கணவர் கே.வி.தவராசா மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன். – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊடரங்கு காலத்தில் மேலும் 639 பேர் கைது

நாட்டில் ஊடரங்கு உத்தரவு மற்றும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 639 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விடயத்தை பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 57 ஆயிரத்து 435 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடையில் 1,369 வாகனங்களும், 2,284 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டை மூடக் கோரிய அமைச்சர்களை கடுமையாக எச்சரித்த பிரதமர் மஹிந்த



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி தலைவர்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக் கூட்டத்தில் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கொவிட் தொற்றைத் தடுப்பதற்காக 3 வாரங்கள் நாட்டை மூடுமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பிவிட்டு அதனை ஊடகத்திடம் வழங்கிய கட்சித் தலைவர்களையே மஹிந்த இவ்வாறு எச்சரித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கட்சித் தலைவர்களுக்கு பிரதமர் கடுமையான அறிவுரைகளையும் வழங்கியுள்ளார்.

நாட்டை மூட வேண்டாம் என அமைச்சரவையில் இணக்கம் வெளியிட்டு, வெளியே சென்று எதிர்ப்பு வெளியிடுகின்றமை பொருத்தமான செயல் அல்ல என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்ப்பு என்றால் வாயை மூடிக்கொண்டு இருக்காமல் அமைச்சரவையில் அதனைக் கூறியிருக்கலாம். ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியது தவறு இல்லை என்ற போதிலும் அதனை ஊடகங்களிடம் வழங்குவது தவறு என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு செயற்படுவதன் மூலம், அமைச்சரவையில் பேசுவதற்கு போதுமான ஜனநாயகம் இல்லை எனவும், அமைச்சர்களிடையே ஒற்றுமை இல்லை எனவும் மக்கள் உணர்கிறார்கள் என்று பிரதமர் கூறியுள்ளார்.

இம்முறை அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ கலந்து கொள்ளாத நிலையில் பிரதமரின் தலைமையில் கூட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை தென்மாகாண சிறையில் 1,471 ஆக அதிகரிப்பு

தென் மாகாண சிறைச்சாலைகளில் இதுவரை இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,471ஆக உயர்வடைந்துள்ளது என்று தென் மாகாண கொவிட் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயலணியின் அதிகாரி சாமர மஹகமகே ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமய, பூஸ்ஸ, அங்குனகொலபெலஸ்ஸ, காலி, மாத்தறை, வீரவில மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய சிறைச்சாலைகளிலேயே தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகளவான தொற்றாளர்கள் பூஸா சிறைச்சாலையிலேயே இனங்காணப்பட்டுள்ளனர். பூஸா சிறைச்சாலையில் இதுவரை 763 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறைந்தளவிலான தொற்றாளர்கள் அம்பாந்தோட்டை சிறைச்சாலையில் இனங்காணப்பட்டுள்ளனர். குறித்த சிறைச்சாலையில் இதுவரை 4 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 283 தொற்றாளர்களும், காலி சிறைச்சாலையில் 117 தொற்றாளர்களும், வீரவில சிறைச்சாலையில் 50 தொற்றாளர்களும், மாத்தறை சிறைச்சாலையில் 31 தொற்றாளர்களும், திஸ்ஸமஹாராம சிறைச்சாலையில் 18 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

# களுபோவில வைத்தியசாலை கொரோனா பிரேதங்களை சமூக வலைத்தளத்தில் போலி பதிவேற்றியவர் கைது

களுபோவில வைத்தியசாலையில் கொவிட் பிரேதங்கள் ஆங்காங்கே கிடக்கின்றன போன்ற போலிப் படங்களை சமூக வலைத்தளத்தில் பதிவேற்றிய நபரொருவர் சிக்கி யுள்ளார்.

வெளிநாடுகளில் கொவிட்டால் உயிரிழந்தவர்களின் பிரேதங்கள் தொடர்பான படங்களையே இலங்கையில் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டு அவர் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் நுகேகொடை பகுதியைச் சேர்ந்த 36 வயதான நபர் எனத் தெரியவருகிறது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவரை ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி நீதிமன்றில் மீண்டும் முன்னிலையாகுமாறு சந்தேக நபருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# மீண்டும் சந்திக்கும் வரை கண்ணீருடன் விடை பெறு

## மனோ எம்.பி. உருக்கம்



'வெள்ளை வான் கடத்தல்காரர் பக்கத்திலிருந்து கடத்தப்படுவோர் பக்கத்துக்கு நல் வரவு' - 2007இல் நாடாளுமன்றத்தில் அரசு பக்கமிருந்து எதிரணிப் பக்கம் நீங்கள் வந்த போது நான் அனுப்பிய இக்குறிப்பு ஞாபகமிருக்கின்றதா? மீண்டும் சந்திக்கும் வரை கண்ணீருடன் விடை பெறு நண்பா.

இவ்வாறு முன்னாள் அமைச்சர்மங்கள சமரவீரவின் மறைவு தொடர்பில் மிக உருக்கமான ருவிட்டர் செய்தியை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடவுள்ளதாவது:-

2005 - 2009 வரை, கொழும்பில் அடைக்கலம் புகுந்திருந்த வடக்கு, கிழக்கு தமிழர்கள், அதிகாரமிக்க வெள்ளை வான் கடத்தல் பயங்கரவாதக் கும்பலினால் 'முனிசிபலிட்டி நாய்'களைப் பிடிப்பதைப்போல், பிடித்து, கடத்தப்பட்டு, கொலைப்பட்டு, பற்றைகளில் சடலங்களாக வீசப்பட்டுக் கொண்டிருந்த காலம். அதன் போது, கொழும்பு எம்.பியாக நான் வருவது வரட்டும் எனப் போராடிக்கொண்டிருந்த வேளை, மங்கள சமரவீர எனக்கு இரகசியமாக செய்தி அனுப்பினார்.

மங்கள சமரவீர ஊடக அமைச்சராக இருந்த வேளை, தானும், ஸ்ரீபதி சூரியராச்சியும் அரசில் இருந்து விலக உள்ளதாகவும், அதுபற்றி தான் ஜனாதிபதிக்கு எழுதும் கடிதத்தில், மனித உரிமை மீறல் வெள்ளை வான் கடத்தலையும் ஒரு காரணமாக கூற உள்ளதாகவும், அதுபற்றிய விபரங்களை தர முடியுமா? எனக் கேட்டிருந்தார்.

மங்கள சமரவீரவின் இந்த இரகசிய செய்தி, கொலைகார சூழலில், கடத்தல்கார கடலில் தத்தளித்து, ஒரு சிறு துரும்பு கிடைக்காதா என ஏங்கிக்கொண்டிருந்த எனக்கு படு உற்சாகத்தை தந்தது. அவருக்கு தகவல்களை அனுப்பினேன்.

மங்கள சமரவீர சொன்னதைப் போல், அரசில் இருந்து விலகும் தீர்மான காரணங்களை ஜனாதிபதிக்குத் தெரிவித்த கடிதத்தில் வெள்ளை வான் கடத்தல் மனித உரிமை மீறல் என்பதையும் காரணமாகக் கூறி இருந்தார். பின்னர் 2007 ஜூன் 15 திகதியன்று நாடாளுமன்றத்தில் அரசு பக்கம் இருந்து எதிரணிப் பக்கம் அவர் வந்து அமர்ந்தார். அவர் வரப்போவதை அறிந்த நான் சில நிமிடங்களுக்கு முன், வெள்ளை வான் கடத்தல்காரர் பக்கத்திலிருந்து கடத்தப்படுவோர் பக்கத்துக்கு நல்வரவு என்று என் கையால் எழுதிய சிறு குறிப்பை அவருக்கு அனுப்பினேன். அதை வாசித்து என்னைப்பார்த்து மங்கள சமரவீர கையைக் காட்டி, சிரித்தது இன்னமும் என் கண்களில் நிழலாடுகிறது.

மங்கள சமரவீர கட்சி மாறியது, எதிரணியில் இருந்தது, பதவி, பவிசு வேண்டி, அதிகாரம் உள்ள ஆளும் கட்சிக்கு அல்ல என்பது நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

அன்று 'தேசபக்த' யுத்தம் என்று, போர் நடந்துக்கொண்டிருந்த வேளையில், யுத்த களத்துக்கு வெளியேயும் தமிழர் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், பல தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளும் அதே அரசில் அமைச்சர்களாக இருந்த வேளையில், ஏனைய பல எதிரணி தமிழ் அரசியல்வாதிகள் நாட்டை விட்டு ஒழிப்போக வேண்டிய நிலைமை ஏற்பட்ட வேளையில்தான், அரசில் இருந்து மங்கள தன் நண்பன் ஸ்ரீபதி சூரியராச்சியுடன் தைரியமாகப் பதவி விலகினார். அதனால்தான் எம் பக்கத்தை நோக்கிய, மங்கள சமரவீரவின் வருகை எனக்கு அன்று பெரும் உற்சாகத்தை தந்தது.

மங்கள சமரவீர கடைசி வரை இந்த நாட்டைப் பல்லின, பன்மத, பன்மொழி நாடாகவே கருதினார். இந்த எண்ணம், நாட்டின் அதிகாரபூர்வ கொள்கையாக மாற வேண்டும் என்பதே அவரது அவா. ஆகவே, அவரது எதிர்பாரா மறைவுக்கு முந்தைய அவரது வாழ்வு அர்த்த முள்ளதாக அமைந்து அவரது ஆத்மா சாந்தியடைய, நாம்அனைவரும்இலங்கையர், இந்நாடு ஒரு பன்மைத்துவ நாடு என்ற கொள்கையை நிஜமாக்க நாம் உழைக்க வேண்டும் - என்றுள்ளது.




# 12 வயது மாணவியை சாகடித்த கொரோனா

## நாவலவில் பெரும் சோகம்

கொழும்பு, நாவல ஜனாதிபதி மகளிர் வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த 12 வயது மாணவி ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

குறித்த பாடசாலையில் தரம் 7இல் கல்வி பயின்றுவந்த ராஜகிரிய கல்பொத்த பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

குறித்த சிறுமி சுவாசக் கோளாறு காரணமாக கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது அங்கு சிறுமிக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே சிறுமி சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

## கொள்கைகளுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீரவின் இழப்பானது கவலைக்குரியது. உண்மையான ஓர் இலங்கையராக அவர் சமத்துவம், நீதி மற்றும் சுயமரியாதை என்பவற்றின் அடிப்படையில் அனைத்து இலங்கையர்களையும் இணைத்து நாட்டை எதிர்கால சந்ததியினருக்காக வளர்ச்சியிலும் செழிப்பிலும் முன்கொண்டு செல்ல வேண்டும் என விரும்பிய ஒருவராவார்.

தனது வாழ்விலும் அரசியல் வாழ்க்கையிலும் இந்தக் கொள்கைகளில் அவர் உறுதியாக இருந்ததுமல்லாமல் எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்தக் கொள்கைகளில் இருந்து அவர் பின்வாங்கவில்லை.

மங்களவின் மரணமானது, இன, மத வேறுபாடின்றி அனைத்து இலங்கை மக்களும் உண்மையான கொள்கைகள் உள்ள ஒரு தலைவரை இழந்த நிலைக்கு ஆளாக்கியுள்ளது.

அன்னாரோடுடனான எனது உறவு மிகவும் நெருக்கமான ஒன்றாகும். இந்த இழப்பால் நான் மிகவும் வேதனையடைகின்றேன். மீள நிரப்பமுடியாத வெற்றிடத்தை இவரது மரணம் ஏற்படுத்தியுள்ளது. கொள்கைகளுக்காக முன்னின்ற ஓர் உற்ற நண்பனை இழந்துள்ளேன்.

இந்தக் கவலைமிக்க நேரத்தில் அன்னாரது குடும்பம் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

## யாழில் 5பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த ஒருவர், வவுனியாவைச் சேர்ந்த மூவர், முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் என 10 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

## அரசின் செயல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எவையும் வழங்கப்படவில்லை. வசதியான மக்கள் ஒருவாறு தாக்குப்பிடித்தாலும் தினக்கூலி வேலை செய்யும் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். அரசினுடைய செயற்பாடு திருப்திகரமானதாக இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றஞ்சாட்டினார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதுகூட 2 ஆயிரம் ரூபா வழங்குவதாக அரசு கூறுகின்றது. ஏற்கனவே 5,000 ரூபா வழங்குவதாகக் கூறப்பட்டு சமுர்த்திப் பணத்திலே அதனைக் கழித்திருந்தனர். மிக மோசமான ஒரு பகல் கொள்ளையை அரசு மேற்கொள்கின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 50 வீதமான குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அரசின் உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை. வசதியான மக்கள் ஒருவாறு தாக்குப்பிடித்தாலும் தினக்கூலி செய்யும் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் மிகப் பெரிய நெருக்கடியைச் சந்திக்க அரசு இந்த விடயத்தில் திட்டமில்லாமல் செயற்படுகின்றனர்.

30 வருட பயங்கரவாதத்தை ஒழித்து விட்டோம்; கொரோனா ஒரு சிறிய பிரச்சினை எனச் சவால் விட்ட அமைச்சர்களைத் தற்போது காண முடியவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காண முடியவில்லை.

தென்னிலங்கையில் அதிகளவு கொரோனா மரணங்கள் பதிவாகின்றன. வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன.

வாய்ச்சவடால்களைத் தூக்கி எறிந்து விட்டு சுகாதாரத்துறையின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு இந்த அரசு அனுமதித்திருந்தால் இந்தக் கொரோனா நோயைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியும்.

மதத் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே நாட்டின் முடக்கத்தையும் ஏற்படுத்தியிருந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2,000 ரூபா எந்தளவுக்குப் போதும்? அது எந்தளவு மக்களுக்குச் சென்றடையும்? என்பது தெரியவில்லை.

வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 94 ஆயிரம் குடும்பங்களுக்கு 2,000 ரூபா வழங்கப்படவுள்ளதென்றால் மீதிக் குடும்பங்கள் என்ன செய்வது? அரசினுடைய செயற்பாடு திருப்திகரமானதாக இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது - என்றார்.

## இனப்படுகொலையும்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நோர்வேயுடனிருந்த பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்படாது, போர் நிறுத்தம் முறிக்கப்பட்டு, அடிபாடுகள் தொடங்க, ஆபத்துக்கள் கருதி, வெளிப்பகுதிகளிலிருந்த மக்கள் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு வலயங்களுக்குள் முடங்கினார்கள். அப்படியாக சென்றடைந்த மக்கள் 1,70,000 பேர் முன்னரே அங்கிருந்தவர்களையும் சேர்ந்து அணுகினர். அவர்கள் எல்லோரையும் பராமரிப்பதென்பது அங்கிருந்த தன்னார்வப் பணிமனைகளால் முடியாதென்றும் அரசாங்கத்தின் தடைகளால் மனித அவலம் ஏற்படுவதையும் சமர்ப்பணமாக 26 ஒகஸ்ட் 2008இல் காலம் சென்ற வண.பிதா ஜேம்ஸ் பத்திநாதன் அடிகள் அப்பொழுது ஐ.நாவின் காரியதரிசியாக இருந்த பான் கீ மூனுக்கு மகஜர் அனுப்பினார். அவர் அந்த சமயத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் அருட்தந்தையாக பணியாற்றியமையால் யுத்தம் காரணமாக அங்கேயே முடங்க வேண்டி இருந்தது. மக்களுக்கு வேண்டிய உதவிகளைத் தனது சக குருமாருடன் சேர்ந்து செய்தார். அதே சமயம் கத்தோலிக்க திருச்சபையின் யாழ். மாவட்ட நீதிக்கும் சமாதானத்திற்குமான குழுவின் வன்னிப் பகுதிக்கான தலைவருமாகப் பணியாற்றினார்.

அவர் 1976ஆம் ஆண்டு காலத்திலிருந்தே தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகம் (TRRO), காந்தீயம் போன்றவைகளுடன் இணைந்து, மக்களின் மீள்குடியேற்றங்களில் பங்கு பற்றியவர். பின் அவற்றால் ஏற்பட்ட நெருக்கடிகளால் அஞ்ஞாதவாசம் செய்தபோது லண்டனில் இயங்கிய சுகோதர புனர்வாழ்வு நிதியங்களோடும், தமிழர் தகவல் நிலையத்தோடும் பணியாற்றியவர். பின் மக்களுடனேயே வாழ வேண்டும், தனது பணி அவர்களுக்கே யானது என எண்ணி நாடு திரும்பி வன்னிப் பகுதிகளில் பங்கு குருவாக சேவை செய்தவர். அவற்றால் பல பகுதிகளிலும் மக்களிடையேயும் நன்மதிப்பைப் பெற்றவர்.

ஐ.நா. காரியதரிசிக்கு அனுப்பிய மகஜரை வன்னியிலிருந்த ஐ.நா. பிரதிநிதிக்கும் கையளித்து அது சர்வதேச அமைப்புக்களுக்கும் அனுப்பப்பட்டு ஊடகங்களினால் வெளியிடப்பட்டு பி.பி.சியின் சிங்கள அலைகளிலும் யாழ்ப்பாண கத்தோலிக்கத் திருச்சபை இப்படியான மகஜரை கையளித்துள்ளது எனச் செய்தியாக்கப்பட்டது. அந்த மகஜரில் மக்களின் அல்லல்கள், வேதனைகள் பிரதிபலிக்கப்பட்டு, அரசாங்கத்தின் அட்டூழியங்களும் பாராமுகமும், அஜாக்கிரதைகளும் சொல்லப்பட்டு முடிவில் -

"மக்களுக்கு எதிரான இந்த - முக்கியமாக மனித உரிமை மீறல்கள் வன்னியின் எல்லாப் பகுதிகளையும் ஆட்கொண்டுள்ளன. இது வெளி உலகிற்கு தெரிவதில்லை. எத்தனையோ தடைகள், கற்கள் கவனமாகக் கட்டப்பட்டு உண்மைகள் வெளியுலகத்திற்கு தெரியப்படாத வகையில் அடக்கப்படுகின்றன, கட்டுப்படுத்தப்படுகின்றன. அதே சமயம், மிக அமைதியாகப் பொய்கள் கட்டவிழ்ந்து, அவை சர்வசாதாரணமாக உலாவ விடப்படுகின்றன. பத்திரிகை நிருபர்களோ, ஊடகங்களோ வன்னிக்குள் வருவது தடைசெய்யப்பட்டு, அவர்கள் சுதந்திரமாகத் தங்கள் கருத்துக்களை, செய்திகளை தருவது தடுக்கப்படுவது தமிழ் மக்கள்மேல் கட்டவிழ்த்து நடத்தப்படும் கொடூரமானதும் தந்திரோபாயமான அடக்குமுறையாகும்.

"வன்னியில் இருக்கும் மக்களை மரணத்திலிருந்தும், அழிவுகளிலிருந்தும், மனிதநேயமின்றி நடத்தப் படுவதினின்றும் விடுவிக்கப்படுவது உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும், இந்த அத்துமீறல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற இந்தநேரக் கோரிக்கை மிக அவசரமானது" - என்று கூறப்பட்டிருந்தது.

(வளரும்.....)

# வடக்கு - கிழக்கு தற்போதும் யுத்தசூழல் போன்றே உள்ளது!

## கஜேந்திரன் எம்.பி. தெரிவிப்பு



போர்முடிந்து பன்னிரெண்டு வருடங்களாகியும் இன்னமும் யுத்த சூழல் போன்று தான் வடக்கு, கிழக்கு காணப்படுகின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் -

கடந்த 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கற்கோவளம் பகுதியில் தீர்த்தக்கரை என்னும் இடத்தில் இராணுவ முகாம் ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த இராணுவ முகாம் யுத்தம் முடிந்து கடந்த பன்னிரெண்டு வருடங்களாகியும் தொடர்ந்தும் இன்னமும் அந்த இடத்திலே தான் இருக்கின்றது.

அந்த முகாம் அமைந்திருக்கின்ற பகுதியால் தினமும் பல நூற்றுக்கணக்கான மீனவர்கள் கடல்தொழிலுக்கு சென்று வருகிறார்கள். அத்தோடு வல்லிபுரத்து ஆழ்வார் கோயிலுக்கும் பல நூற்றுக்கணக்கானவர்கள் சென்று வருகின்றமை வழமை.

அதனைவிடவிஷேடமாகத்திருவிழா நாள்களிலே பல்லாயிரக்கணக்கானவர்கள் அந்த வீதிகளை முகாமிருக்கின்ற பகுதியால் சென்று வருவதுண்டு.

அதிலே படையினர் முகாமிட்டிருப்பதாலே பொதுமக்களுக்கு அச்சமான ஒரு நிலை தான் இருக்கின்றது.

குறிப்பாக பெண்கள் தனியாகப் போக்குவரத்து செய்வதிலே ஓர் அச்ச நிலை இருக்கின்றது. இந்த நிலையில் அந்த முகாமுக்கு என மக்களின் காணியை மக்களினது விருப்பங்களுக்கு மாறாகச் சுவீகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நான்கு பேருக்கு சொந்தமான காணியைச் சுவீகரிப்பதற்கு மக்களுக்கு சம்பிரதாயபூர்வமாகக் கடிதங்களை அனுப்பி விட்டு காணிகளை சுவீகரிப்பு செய்வதற்கு ஈடுபட்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் தான் கடந்த 16 ஆம் திகதி சென்று காணியை அளக்க வரும்போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தோம்.

அதிலே சட்டத்தரணி காண்டீபன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். எங்களுடைய எதிர்ப்பினாலே அளக்கின்ற நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது.

அந்தப் பிரதேசம் முழுவதிலும் இருக்கும் மக்கள் அந்த இடத்திலே முகாம் அமைவதை விரும்பவில்லை. மக்களுடைய சுதந்திரமான நடமாட்டத்துக்கு இது இடையூறான விடயம்.

அதனைவிட இலங்கைப் படைகள் தமிழர்களுடைய வாழ்விடங்களில் இருப்பதை மக்கள் விரும்பவில்லை.

ஒட்டுமொத்தமாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு அளவீடு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. மேற்கொண்டு ஏதும் நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதன் பின்னரே தான் முடிவெடுக்கப்பட வேண்டும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படக்கூடாது.

அதாவது காணி உரிமையாளர்களை அவர்களது விருப்பத்துக்கு மாறாக நிர்ப்பந்திக்கப்பட்டு அந்தக் காணிகளை சுவீகரிப்பதற்கான முயற்சிகள் கூடாதென அந்த இடத்திலே வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

போர்முடிந்து பன்னிரெண்டு வருடங்களாகியும் இன்னமும் யுத்த சூழல் போன்று தான் வடக்கு, கிழக்கு காணப்படுகின்றது. இலங்கையிலே இருக்கின்ற 20 டிவிசன் படைகளிலே 16 டிவிசன் படைகள் வடக்கு கிழக்கிலேயே நிலை கொண்டிருக்கின்றன.

அதிலும் வடமாகாணத்திலே 13 டிவிசன் படைகள் நிலை கொண்டிருக்கின்றன. தொடர்ந்தும் இராணுவத்துக்காக காணி சுவீகரிக்கின்ற நடவடிக்கைகள் தான் படைத் தரப்பில் இருந்து அரசாங்க தரப்பில் இருந்து முன்னெடுக்கப்படுகின்றன.

நாங்கள் இவற்றை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தப் படைகள் இந்த மண்ணில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்பது எங்களுடைய நிலைப்பாடு என மேலும் தெரிவித்தார்.

# சிறந்த ஆளுமையை இழந்தது தமிழினம்!

## கௌரி சங்கரி மறைவுக்கு சசிகலா இரங்கல்

கொழும்பில் சவால் மிக்க பல வழக்குகளில் சாதித்த சிறந்த ஆளுமையைத் தமிழ் இனம் இழந்துள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசாவின் துணைவியார், சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா கடந்த திங்கட்கிழமை காலமானார்.

இது தொடர்பாகத் தமது அனுதாபங்களைத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாமனிதர் ரவிராஜின் உடலை யாரும் இல்லாத சூழலில் மீட்டது முதல் யாழில் அடக்கத்துக்கு எடுத்து வருவது வரை ஆபத்து நிறைந்த காலத்தில் பக்கபலமாக இருந்த குடும்பம். வாழ்க்கையில் மறக்க முடியாத நாள்கள் அவை எனவும் சசிகலா ரவிராஜ் குறிப்பிட்டுள்ளார்.

# கனடா நாடாளுமன்றுக்கு ஏழு தமிழர்கள் போட்டி

கனடாவின் 44 ஆவது நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை ஏழு தமிழ் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் 20 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

லிபரல் கட்சியின் சார்பில் மூவரும், கொன்சவேடிவ் கட்சியின் சார்பில் இருவரும், ப்ளொக் கியூபெகோயிஸ், என்.டி.பி. சார்பில் தலா ஒருவரும் என 7 தமிழ் வேட்பாளர்கள் இம்முறை போட்டியிடுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.




**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

**முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - ரூபா 7,000.00**
**இரண்டாம் இடம் - ரூபா 5,000.00**
**மூன்றாம் இடம் - ரூபா 3,000.00**
**தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - ரூபா 1,000.00**

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1.நல்லூர் ஆலயத்தின் ஷண்முக ஸ்வர்ண சபா மண்டப கும்பாபிஷேகம் எந்த ஆண்டு இடம்பெற்றது?**

............................................................................

**2. கணபதியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு ஒழுகும் சமய நெறி எது?**

............................................................................

**3. பன்னிரு ஆழ்வார்களில் திருப்பாவையை யாத்தவர் யார்?**

............................................................................

**4. முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளும் எவை?**

............................................................................

**5. எட்டாம் திருமுறையை அருளியவர் யார்?**

............................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

13

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ------------------------------------------------
2. பிறந்த திகதி : ------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ------------------------------------------------
4. பாடசாலை : ------------------------------------------------
5. முகவரி : ------------------------------------------------

............................................
கையொப்பம்

காலைக்கதிர்
Kalaikkathir

# ஐ.தே.கவின் பிரேரணையை செயற்படுத்தியிருந்தால் ஜனாதிபதிக்கு இந்த அவலநிலை வந்திருக்காதாம்!

## ருவான் விஜேவர்த்தன சொல்கிறார்



கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம்கொடுக்க வேண்டிய முறை தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி வெளியிட்டிருந்த பிரேரணைகளை செயற்படுத்தி இருந்தால், அர்ப்பணிக்க தயாராகுங்கள் என நாட்டு மக்களுக்கு தெரிவிக்கவேண்டிய அவல நிலை ஒருபோதும் ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்காது என ஐக்கிய தேசியக் கட்சி பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில -

நாடு எதிர்கொண்டுள்ள தொற்று நிலைமையில் கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கவேண்டிய முறை தொடர்பில் தெளிவுபடுத்தி ஐக்கிய தேசியக் கட்சி 21 அம்சங்கள் அடங்கிய பிரேரணை ஒன்றை அரசாங்கத்துக்குக் கையளித்திருந்தது. இதில் சுகாதாரம் மற்றும் பொருளாதார ரீதியில் பாதுகாப்பான நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பிரேரணைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியபோது ஜனாதிபதிக்கும் இதனைக் கையளித்திருந்தார்.

ஏனைய கட்சிகள் போல் அல்லாமல் நாங்கள் அரசாங்கத்தை விமர்சிப்பதுடன் எமது மாற்று வழிகளையும் தெரிவிக்கின்றோம்.

மேலும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 200 வரை நெருங்கி இருக்கின்றது. நாட்டை மூன்று வாரங்களுக்காவது முடக்கவேண்டும் என்றே நாங்கள் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு தெரிவித்து வந்தோம். இருந்தாலும் அரசாங்கம் தாமதித்தாவது 10 நாள்களுக்கு நாட்டை முடக்குவதற்கு தீர்மானித்திருக்கின்றது.

என்றாலும் வீதிக்குச் சென்று பார்த்தால் பொது மக்கள் வீதிகளில் இருக்கின்றனர். நாடு முடக்கப்பட்டிருப்பதுபோல் தெரியவில்லை. இவ்வாறான முடக்கத்தை நாங்கள் கோரவில்லை. சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கும் முறையிலான முடக்கமே தேவையாகின்றது.

அத்துடன் கடந்த வாரம் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் சுருக்கம் என்னவென்றால், கொரோனா காரணமாக நாட்டை தொடர்ந்து முடக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் அர்ப்பணிப்பதற்கு மக்கள் தயாராகுமாறு மக்களுக்கு அறிவித்திருக்கின்றார்.

அதாவது, பொருள்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிக்கவேண்டி ஏற்படும், சம்பளம் வழங்க முடியாமல் போகும், அதனால் அரச ஊழியர்கள் தங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற விடயத்தையே ஜனாதிபதி மறைமுகமாகத் தெரிவித்திருக்கின்றார்.

எமது அரசாங்க காலத்தில் அரச ஊழியர்களுக்கு அதிகரித்த 10 ஆயிரம் ரூபாவை இல்லாமலாக்குவதற்கே இந்தத் திட்டமாகும். அத்துடன் எமது பிரேரணையில் பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லவேண்டும் எனத் தெரிவித்திருக்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துக்குச் சென்றால், எங்களுக்கு வேறு நாடுகளில் இருந்து நிவாரணங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். அந்த இடத்துக்குச் செல்லாமல் மக்களுக்கு அர்ப்பணிக்குமாறு தெரிவிக்கவேண்டாம். தங்களது உற்ற நண்பர்களுக்கு கொரோனாத் தொற்றின் மூலம் பணம் கொள்ளையிட இடமளிக்க வேண்டாம்.

எனவே சுகாதாரம் மற்றும் பொருளாதாரம் பாதுகாக்கப்பட்ட நாடொன்றாக எமது நாட்டைக் கட்டியெழுப்புத் தேவையான பிரேரணைகளை நாங்கள் அரசாங்கத்துக்கு கையளித்திருக்கின்றோம். அந்த பிரேரணைகளை ஏற்றுக்கொண்டிருந்தால், அர்ப்பணிக்கத் தயாராகவேண்டும் என மக்களுக்கு தெரிவிக்கவேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்காது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொவிட் தொற்றாளராகி பலியாவோரை தகனம் செய்ய இலவச சவப்பெட்டிகள்

## அத்தனகல்ல பிரதேச சபை முன்மாதிரி செயற்பாடு

அத்தனகல்ல பிரதேச சபை இலவசமாக சவப் பெட்டிகளை வழங்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

கொவிட் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதற்கு இலவசமாக சவப்பெட்டிகள் வழங்குவதாக அத்தனகல்ல பிரதேச சபையின் தலைவர் பிரியந்த புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொவிட் காரணமாக உயிரிழப்போரின் குடும்ப உறுப்பினர்கள் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர். அவ்வாறு பாதிக்கப்படுவோருக்கு உதவும் நோக்கில் சவப்பெட்டிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. குறிப்பாக குறைந்த வருமானம் ஈட்டும் குடும்ப உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தால் அந்தக் குடும்பத்தால் சவப்பெட்டி ஒன்றைக் கூட கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறான ஓர் பின்னணியில் கொவிட் -19 காரணமாக மரணிப்போரின் சடலங்களை தகனம் செய்ய சவப்பெட்டிகளை இலவசமாக வழங்கவும், இறுதிக் கிரியைகளுக்கு கட்டணம் அறவீடு செய்யாதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொடையாளர்கள் சிலர் பலகைகளை வழங்கிவரும் நிலையில் பிரதேச சபையின் பணியாளர்கள் சவப்பெட்டிகளைத் தயாரித்து வருகின்றனர் என குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டை தொடர்ந்தும் மூட முடியாது 30 ஆம் திகதி மீளத் திறக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்து

நாட்டை தொடர்ந்தும் முடக்கி வைக்க முடியாதெனவும், ஆகையினால் எதிர்வரும் 30 ஆம் திகதி நாடு மீண்டும் திறக்கப்படவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

'நாட்டைத் திறக்கத் தவறினால் பல தொழிற்துறைகள் கடுமையாக பாதிக்கப்படும். சுகாதாரப் பிரிவுகளின் வேண்டுகோளுக்கு மத்தியில் நாட்டை மூட ஜனாதிபதி முடிவு செய்தார் எனவும், இது கடினமான முடிவு என்றும் கூறினார்.

சுகாதார அமைச்சர் பரிந்துரைகளை கருத்தில் கொண்டு அவர்களின் கோரிக்கைகளைப் புறக்கணிக்க முடியாது. நாளாந்த கொவிட் வழக்குகள் அதிகரித்து வருகின்றமையால் சுகாதாரத் துறை ஊழியர்கள் மன அழுத்தத்தில் இருக்கின்றனர்.

எனவே கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை விதிக்க முடிவு எட்டப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டை எப்போதும் மூடிவைக்க முடியாது என்றும், இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊட்டச்சத்து உணவு வகைகளைத் தினமும் உட்கொண்டால் கொவிட்டிலிருந்து தப்பலாம்!

## சுகாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

கொவிட் தொற்றில் இருந்து மீள்வதற்கு தினசரி ஊட்டச்சத்துள்ள உணவை உட்கொள்வது அவசியம் என்று சுகாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பேராசிரியர் ரணில் ஜயவர்தன இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்ட மக்களும் சீரான உணவைப் பெறுவது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காகப் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கு மேலதிகமாக தினசரி ஊட்டச்சத்துள்ள உணவை உட்கொள்வது அவசியம்.

கொவிட் வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு லீற்றருக்கு மேல் தண்ணீர் குடிக்க வேண்டும். இல்லையென்றால், அந்த நோயாளிகளுக்கு நீரிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு மருந்தைப் போன்று உணவும் மிக முக்கிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச ஊழியர் சம்பளம் குறைப்பு; எந்த முடிவும் இதுவரை இல்லை

கொவிட் தொற்றுக் காரணமாக நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில் அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படும் சாத்தியம் காணப்படுவதாகப் பரவலாக சர்ச்சை நிலை நீடித்து வந்தது.

இந்த நிலையில் அரச துறையில் பணியாற்றும் ஊழியர்களின் சம்பளத்தைக் குறைக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அரசாங்கம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அறிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் அறிவிக்கப்பட்டது.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சரவையின் இணை பேச்சாளர்களில் ஒருவரான அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஓகஸ்ட் மாத சம்பளத்தை கொவிட்-19 நிதியத்துக்கு நன்கொடையாக அளிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. எனினும் இது அரசு துறையில் பணியாற்றுவோரின் ஊதியக் குறைப்புக்கான முயற்சியல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கை தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் மனஅழுத்தத்தால் ஆஸ்திரேலியாவில் தற்கொலை

ஆஸ்திரேலியாவில் இலங்கையைச் சேர்ந்த தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

38 வயதான இவர் கடந்த வெள்ளிக்கிழமை தனக்குத் தானே எரியூட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோனேஸ்வரன் கிருஷ்ணபிள்ளை என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர் மெல்பன் நகரின் மேற்கு புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள சன்சைன் என்ற இடத்தில் வசித்துள்ளார்.

இவர் 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்தியாவிலிருந்து படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வந்து புகலிடம் கோரியுள்ளார். எனினும், அவருக்கு தற்காலிகமாக தங்குவதற்கு, பிரிட்ஜிங் விசா வழங்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், அவர் மன அழுத்தத்தில் இருந்தார் எனவும், கடந்த வெள்ளிக்கிழமை தனக்குத் தானே எரியூட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.08.2021 இல் வெளியிடப்பெற்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# பேரினவாதச் சேற்றில் மலர்ந்த வெண்தாமரை மங்கள சமரவீர!

## பொ. ஐங்கரநேசன் இரங்கல்



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வலுவடைந்தமைக்குச் சிங்களவர்கள் காரணமே தவிர, தமிழர்கள் அல்லர். ஆரம்ப காலத்தில் தமிழர்கள் மொழியுரிமை கேட்டார்களே தவிர, தனிநாட்டைக் கோரவில்லை. மொழியுரிமை உரியவாறு வழங்கப்படாத நிலைமையிலேயே அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார்கள் எனத் தெரிவித்ததன் மூலம் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை வெளிப்படையாகவே ஏற்றுக்கொண்ட மங்கள சமரவீர பேரினவாதச் சேற்றில் மலர்ந்த ஒரு வெண்தாமரை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவின் மறைவையொட்டி பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கையில் –

மங்கள சமரவீர பிற்காலத்தில் தேர்தல் அரசியலில் இருந்து விலகிக் கட்சி அரசியலைத் தாண்டி கொள்கை ரீதியான அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார். இந்தக் காலப்பகுதியில் தன்னைத்தானே சுயபரிசீலனை செய்பவராக விளங்கிய இவர், நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி நிலைக்கு இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் இருந்து தான் உட்பட அனைத்து அரசியல் வாதிகளும் அரசாங்கங்களும் இனவாதத்தை ஆதரித்த வாக்காளர்களும் பொறுப்புக்கூற வேண்டும். அரசாங்கம், எதிர்க்கட்சி, பேரினவாதம் உள்ளிட்ட அனைத்துமே தோல்வியடைந்து விட்டன என்ற முடிவுக்கு வந்திருந்தார்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறைமை முழுமையாகத் தோல்வியடைந்திருக்கின்றது. இது தற்போது தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கான வரப்பிரசாதங்களை மாத்திரமே வழங்கக் கூடிய வெள்ளை யானையாக மாறியிருக்கின்றது என்று தெரிவித்த மங்கள சமரவீர, தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படவேண்டும் என்பதில் இதயசுத்தியுடன் உழைத்தவர் ஆவார்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது முன்னெடுத்த புதிய அரசியல் யாப்பை சிங்கள மக்களை ஏற்றுக் கொள்ள வைக்க வெள்ளைத் தாமைரை இயக்கத்தினூடாகக் கடுமையாக உழைத்திருந்தார்.

தற்போதைய அரசாங்கம் ஏனைய பலம்வாய்ந்த சக்திகளைப் புறந்தள்ளிச் சீனாவுடன் மாத்திரம் நெருங்கிப் பயணிப்பதால் வருங்காலத்தில் பூகோள அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டி நேரிடும் என்று எச்சரித்த மங்கள சமரவீர சீனாவுடனும் இந்தியாவுடனும் இலங்கை சமாந்தரமான நெருக்கத்தைப் பேணுவது அவசியமாகும் என்றும் சுட்டிக்காட்டி வந்தார்.

நாடு பேரினவாதச் சக்தியிலும் கொரோனாவின் கோரப்பிடியினுள்ளும் சிக்கித் தவிக்கும் நிலையில் மங்கள சமரவீரவை கொரோனா பலிகொண்டிருப்பது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பெரும் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா இயற்கை அன்னையின் மடியில் சாந்தியடையட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# உண்மையான ஜனநாயகவாதியை இலங்கை இன்று இழந்து நிற்கிறது

## மங்களவுக்கு சுரேஷ் அஞ்சலி

மங்களசமரவீரவும் நானும் ஏறத்தாழ ஒரேகாலகட்டத்தில் பிறந்து ஒரே காலத்தில் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள். அன்றிலிருந்து இன்று வரை நெருக்கமான உறவுகளைப் பேணுவதிலும் நட்பு பாராட்டுவதிலும் இருவரும் உளத்தூய்மையுடன் செயற்பட்டு வந்தோம்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தனது இலங்கலில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –


சிங்கள மேலாதிக்க கடும்போக்காளர்கள் மத்தியில் ஒரு மானுடனாக சகல இன மக்களைப் பற்றிச் சிந்தித்தவர். அன்னாரின் தந்தை ஓர் இடதுசாரி சிந்தனை உடையவர் என்பதால் மங்களசமரவீரவும் இனத்துவேசம் இன்றி, இலங்கை ஒரு பல்லின மக்கள் வசிக்கும் நாடு என்பதை ஏற்று அனைவரும் சமத்துவத்துடன் வாழ வேண்டுமென்பதில் அக்கறை செலுத்தி அதற்காகக் கடினமாக உழைத்துவந்தார். பெரும்பான்மையான சிங்கள மக்கள் வாழுகின்ற மாத்தறை நாடாளுமன்றத் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்த போதிலும் இனவேறுபாடின்றி தமது கடமைகளை முன்னெடுத்திருந்தார்.

பழகுவதற்கு இனியவர், ஒரு நேர்மையான அரசியல்வாதி, இந்த நாட்டுக்கு அவர் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்ற போது அவரைக் கொரோனா காவுகொண்டது இலங்கைக்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், அரசியல் நண்பர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். – என்று தெரிவித்தார்.

# மங்களவின் இழப்பு வேதனையளிக்கிறது இரங்கல் செய்தியில் அமைச்சர் டக்ளஸ்

கொவிட் பேரவலத்தால் நாட்டில் நாள் தோறும் ஏற்படுகின்ற நூற்றுக்கணக்கான உயிரிழப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.



இவ்வாறான சூழ்நிலையில், முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவும் உயிரிழந்துள்ளார் என்ற செய்தி அறியக் கிடைத்துள்ளது.

அரசியல் நிலைப்பாடுகளுக்கு அப்பால் நற்பண்புகளை கொண்ட ஒருவரான மங்கள சமரவீரவின் இழப்பு எமக்கு வேதனையை ஏற்படுத்தியிருக்கின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அன்னாரின் இழப்பு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சக நாடாளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சரவையில் இணைந்து செயற்பட்ட காலத்திலும் அமரர் மங்கள சமரவீர இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட்டிருந்தார்.

அன்னாரின் இழப்பால் துயருற்று இருக்கின்ற அவரின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன், காலம் தாமதிக்காமல் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதன் மூலமும், அரசாங்கத்தினால் அறிவுறுத்தப்படுகின்ற சமூக பாதுகாப்பு ஒழுங்குகளை இறுக்கமாக பின்பற்றவதன் மூலம் எதிர்கொண்டுள்ள பேரவலத்தில் இருந்து நாட்டை பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகின்றேன் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமைகளுக்காக ஒலித்த குரல் மௌனித்தது

## கௌரிசங்கரிக்கு சுரேஷ் பிறேமச்சந்திரன் வேதனை



எமது இனிய நண்பரும் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணியுமான தவராசாவின் பாரியாரான திருமதி கௌரிசங்கரி தவராசா அவர்கள் இயற்கை எய்தியமை ஈழத் தமிழர்களுக்கு பேரிழப்பாகும். பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பெயரில் நூற்றுக்கணக்கில் எமது இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்ட பொழுது இரவு பகல் பாராது அவர்களின் வழக்குகளை எடுத்து வாதாடுவதற்காக நேர்மையாகக் கடமையாற்றிய ஒரு சட்டத்தரணி.

– இவ்வாறு தனது இரங்கல் செய்தியில் தெரிவித்தார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தமிழ்ச் சமூகம் மத்தியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கானோருக்கு வாதாடிய பிரபல சட்டத்தரணி மாத்திரமல்லாமல் அவரது கணவர் தவராசா மற்றும் ஏனைய சட்டத்தரணிகளின் உதவியுடன் அவர்களை விடுவித்தவர்.

பல்வேறு சிறைச்சாலைகளுக்கும் சென்று அரசியல் கைதிகளின் தேவைகளை, பிரச்சினைகளை அறிந்துவந்து அவற்றுக்கான தீர்வுகளைக் காண்பதில் முன்னின்று உழைத்தவர். மனித உரிமைகள், பெண்விடுதலை போன்ற விடயங்களில் மாத்திரமன்றி, தமிழ் மக்களின் அரசியல் விடுதலை தொடர்பாகவும் ஆழமான அறிவு கொண்டவர்.

அவரது கணவர் தவராசாவினுடைய அரசியல் நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக இருந்தவர். யாரும் எப்பொழுதும் அணுகக்கூடிய வகையில் எளிமையாக வாழ்ந்தவர். அத்தகைய ஒருவர் எம்மை விட்டு நீங்கியமை அவரது குடும்பத்துக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும். திருமதி கௌரிசங்கரி தவராசாவின் ஆத்மார்த்தமான பணிகள் என்பது தமிழ் மக்கள் மத்தியில் நீண்டகாலம் வாழும்.

அன்னாரைப் பிரிந்துவாடும் அவரது கணவர், குடும்பத்தினர், உறவினர், அரசியல் நண்பர்கள், தொழில்சார் உறவுகள் மற்றும் நண்பர்களுடன் நாமும் துயர் பகிர்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம். – என்றுள்ளது.

# சிரேஷ்ட தலைவரை இழந்துவிட்டது நாடு

## பிரதமர் மஹிந்த கவலை



இலங்கை நேற்று ஒரு சிரேஷ்ட தலைவரை இழந்து விட்டது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மறைந்த மங்கள சமரவீர நாட்டை நேசித்தவர் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

டுவிட்டர் செய்தியொன்றின் ஊடாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீரவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

மங்களவின் மறைவுச் செய்தியைக் கேட்டு நான் மிகுந்த அதிர்ச்சியடைகின்றேன். இலங்கைக்காக மங்கள ஆற்றிய சேவைக்கு நன்றி தெரிவிக்கின்றேன். மங்களவின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்துக்கு எனது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று பிரதமர் தனது ருவிட்டர் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.